உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month, at one shilling a Quarter, payable in advance.

சஞ்சிகை. ௧] ௲அ௱௪௰௧ ௵. வைகாசி ௨௰, ௩௰. வியாழக்கிழமை. Thursday, May 20, 1841. [No. 10.

வரலாறு.

உதயதாரகைப் பத்திரத்தில் கற்கை, சாத்திரம், பொதுவான கல்வி, பயிர்ச்செய்கை, அரசாட்சி, மார்க்கம் முதலானவைகளைப் பற்றியும், பிரதான புதினச் சங்கதிகளைப் பற்றியும் அச்சடிக்கப்படும்.

அது தமிழ்ப் பாஷையிலும், இடைக்கிடையே தமிழும் இங்கிலீசுங் கலந்ததாயும், எட்டுப் புறமுள்ளதாக நான்காய் மடித்த தாள் அளவில் ஒவ்வொரு மாதத்து முதலாம் மூன்றாம் வியாழக்கிழமைகளிற் பிரசித்தம் பண்ணப்படும்.

இதின் விலை, பத்திரம் ஒன்றுக்கு, ௨. பென்சு அல்லது ௰௬. வெள்ளைச் சல்லி, அல்லது மூன்று மாதத்திற்கும் முன்னறக் கொடுத்திருந்தால் அப்பத்திரங்களின் விலை ஒரு சிலிங்கு.

இதற் பத்துப் பத்திரிகைக்குக் கையெழுத்து வைத்து மாதாந்தம் பணம் முன்னேறக் கொடுத்து வைத்து, மறு பெயருக்குச் செலவிடக்கூடிய காரியகாரருக்கு இதின் விலை பத்திரம் ஒன்றுக்கு, ௧½. பென்சு. அல்லது ௯. பணம். அல்லது மூன்றுமாதத்திற்கு முன்னறக்கொடுத்திருந்தால் விலை, ௯ பென்சு.

இருபதுக்குக் கையெழுத்து வைத்து வருஷாந்தம் முன்னேறக் கொடுத்துவைக்குங் காரியக்காரருக்கு இதன் விலை பத்திரம் ஒன்றுக்கு ௧. பென்சு, அல்லது ௮. வெள்ளைச் சல்லி. மூன்றுமாதத்திற்கு முன்னறக்கொடுத்திருந்தால், விலை ஆறு பென்சு.

☞ தவாற்செலவை விட.

காகிதம் எழுதிக்கொள்பவர்கள் தாங்கள் அறிவிக்க வேண்டியவைகளை உதய தாரகைப் பத்திரத்தினது முகாமைக்காரருக்கு எழுதித் தவாற்செலவுகொடுத்தனுப்பவும்.

TERMS.

The MORNING STAR will be devoted to Education, Science, and general Literature, and to the dissemination of articles on Agriculture, Government, and Religion, with a brief summary of important News.

The PRICE of the Paper is *two pence* a number, or *one shilling* a quarter, payable in advance.

To Agents who subscribe for *ten copies* and pay *in advance*, the price is *one and a half pence* a number, or *nine pence* a quarter.

To those who subscribe for *twenty copies* and pay *in advance*, the price is *one penny* a number, or *six pence* a quarter.

N. B. Postage extra.

Persons who wish to act as AGENTS, may apply to the Publisher, at the American Mission Press, Manepy, Jaffna.

CORRESPONDENTS may send their Communications *post paid* addressed to "The Editors of the Morning Star," Batticotta, Jaffna.

The following persons are authorized to act as *Agents* for the "Morning Star."

JAFFNAPATAM—Mr. C. F. Grenier; CHUNDICOLY—M. J. Poviratasingem; POINT-PEDRO—A. Holmes; CALPENTYN—J. Woodhull; TRINCOMALIE—Rev. C. Hole; COLOMBO—Philip Canjimanadan; KANDY—Rev. W. Oakley; MADURA—Rev. F. D. Ward; DINDIGUL—Rev. J. J. Lawrence; TANJORE—Rev. T. Brotherton; MADRAS—P. R. Hunt, Esq.

புக்கடுதிவு.—பரமர் நாகநாதபிள்ளை.

[BRIEF HISTORICAL VIEW OF INDIA.]

[Continued from page 78.]

இந்து தேசச் சரித்திரம்.—*Trees.*

ஆலமரம் (Banyan or Indian Fig tree the Ficus Religiosa of Linnaeus) இந்தியராலே பரிசுத்த மரமென்று எண்ணப்பட்டிருக்கின்றது. அது இந்து தேசத்தில் எங்கும் உண்டு. மதுரை, திரிசிரபுரம், தஞ்சாவூர், கோயம்புத்தூர் முதலிய ஊர்களில் இராச பாதைகளோரமும் மிகவும் உண்டு. அது அநேகம் விழுதுகள் விட்டு வெகு தூரத்துக்குப் படர்ந்து நிலத்தில் வேர்பற்றி இருக்கும். அவ்விருக்கத்தைப் பற்றித் தமிழ்ப் புலமைகளில் அநேக இடங்களில் விசேஷித்துப் பாடப்பட்டிருக்கின்றது.

மில்ட்டன் (Milton) என்னும் இங்கிலீசுப் புலவன் மிகவும் நேர்த்தியாக அதைப்பற்றிப் பாடியிருக்கிறான்.* மெய்யாகவே ஆலவிருக்கம் மற்றும் விருக்கங்களைப் பார்க்கிலும் பசுமையாயுஞ், சிறப்பாயும், அகன்றதாயுங், குளிர்ந்த நிழலைத் தரக்கூடியதாயும் இருக்கின்றது. இவ்வித விருக்கங்கள் நாளுக்கு நாள் அதிக வளர்ந்துகொண்டு நீண்ட கவர்களை விடுவதினால் மற்ற மரங்களிலும் மிகுந்த விசாலம் பொருந்தி யிருக்கின்றன. உலகத்திலுள்ள எல்லா ஆல மரங்களிலும் பெரிதான இரண்டு மரங்கள் உண்டு. அவைகளில் ஒன்று பாரிகாசப் பட்டணத்துக்குச் (Barsache or Barigaza) சில மயில் தூரத்துக்கு அப்பால் நிருமதை ஆற்றிலுள்ள ஓர் தீவிலும், மற்றது பாகார் (Bahar) தேசத்திலுள்ள மாங்கீ (Mangee) என்னும் பட்டணத்துக்கு அருகாகவும் நிற்கின்றன. முந்தின மரம் (௩௰) வருடக்காலமாக நின்று வருகின்றது. அதின் நிழல் (௭௲)ஞ் சனங்கள் இருக்கத்தக்க விசாலமுள்ளது. நிலத்தில் வேர் வைத்திருக்கிற (௩௱௫௰) திற்கு மேற்பட விழுதுகளுஞ் சுற்றளவில் (௨௲) அடி விஸ்தாரமுள்ள மூவாயிரத்துக்கு மேற்பட்ட சிறு கிளைகளும் இவ்விருக்கத்தில் உண்டு. முன்னொரு காலத்தில் நிருமதை ஆறு பெருகி இம்மரத்தின் விழுதுகளில் அநேகத்தை வேரோடே பிடுங்கி அள்ளிக்கொண்டு போனபடியால் இம்மரம் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் முன்னே பெரிதாய் இருந்ததென அறியலாம். இவ்விருக்கத்தின் கீழ் கெபிபரென்னும் பிராமணயோகி (Cubbeer Burr) வெகுகாலமாய் இசனை நோக்கித் தவசுபண்ணிக் கொண்டிருந்ததினாலே இம்மரத்திற்கு கெபிபரென்னும்பேர் உண்டாயிற்றென்று சனங்கள் சொல்லிவருகிறார்கள். இதைப் பற்றி மாரிசு என்னுஞ் சரித்திரகாரன் எழுதிவைத்த இந்து தேசச் சரித்திரப் புத்தகத்திற் காணலாம் (Maurice's Indian Antiquities Vol. III pp. 166.) இம்மரத்தைப் பற்றிப் பல சரித்திரகாரரும், யாத்திரை போகிறவர்களும் விபரித்திருக்கிறார்கள். விசேடமாகப் புத்திரசந்தானமுடையவர்கள் இம்மரத்தைப் பரிசுத்தமானதென்று எண்ணுகிறார்கள். இவ்விருக்கத்தில் சத்தி என்னுந் தேவதை வாசம்பண்ணுகிறாள் என்றும், அவள் புதிதாய்ப் பிறக்கிற பாலகனை ஒன்றில் காத்துக்கொள்ளுகிறாள். அல்லது அழித்துப்போடுகிறாள் என்றும் நம்பிவருகிறார்கள். அத்தேவதையினிடத்தில் தாயானவள் தன் பாலகனைக் கொண்டுவந்து அதினுடைய சென்னத்தைப் பற்றிய சாதக ஓலையைப் பலிபீடத்தின்மேல் வைத்து, தன் பாலகன் அதைத் தொடும்படி பண்ணுகிறாள். மறுபடி தாயானவள் தேவதையை நோக்கி அம்மா, என் பாலகனை இரட்சித்துக் காக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொள்வாள். அதன் பின் குரு வந்து மந்திரத்தை ஓதுவான்; எவ்விதமாகவெனில், கையில் ஒரு புட்பத்தை எடுத்துப் பாலகனின் இடது கையில் வைத்துக்கொண்டு, அதின் கையின் நடு விரல்கள் நான்கையும் ஒன்றோடொன்று பிணைத்து அணிவிரல் இரண்டையுஞ் சிறுவிரல் இரண்டையும் ஒன்றோடொன்றும், பெருவிரல்கள் இரண்டையும் ஒன்றோடொன்றுமாகச் சேர்த்துப், பசுமூலச் சாயலாய்ப் பிடித்துக்கொண்டு கையிலே புட்பத்தையும் வைத்துக்கொண்டு சங்கிருதத்திலே தேவதையின் நாமத்தையுஞ், சாயல் முதலியவைகளையுஞ் சொன்ன பின்பு, அம்மா! வாரும், வாரும், வாரும் என மூன்றுதரந் தேவதையை அழைப்பான். மறுபடி பூவை யோர்ந்துகொண்டு அதைத் தலையில் வைத்து மறுபடி தேவதையின் தலையிற் சாத்துவான. கொஞ்சநேரத்தினபின் வாழை

* There soon they chose
The fig-tree: not that kind for fruits renowned;
But such as, at this day to Indians known
In Malabar or Deccan, spread her arms,
Branching so broad and long, that in the ground
The bending twigs take root, and daughters grow
About the mother tree, a pillar'd shade
High over-arch'd, and echoing walks between.
There oft the Indian herdsman, shunning heat,
Shelters in cool, and tends his pasturing herds
At loop holes cut through thickest shade.
Milton's Paradise Lost.

Digitized by Google

ப் பழங்களும், பொங்கற் சாதமும், பச்சை அரிசியும், பூமாலைகளுந், தண்ணீரும், மற்றும் பதார்த்தங்களுந் தேவதையைப் பிரியப்படுத்தக் காணிக்கைகளாகச் செலுத்தப்படும். பாகார் தேசத்திலுள்ள மற்ற மரத்தில் (௬௰)கவர்களான விழுதுகள் உண்டு. நடுமதியத்தில் இம்மரத்தின் நிழல் (தூாயகூ)அடி விஸ்தாரமுள்ள இடத்தை அடக்கி யிருக்கின்றது. ஆலிலைகள் இங்கிலாந்து, அமரிக்கா முதலிய இடங்களில் வளருகிற ஐவி (Ivy) என்னும் பூண்டின் இலைகளுக்கு ஒத்திருக்கும். ஆலமரத்தில் இருந்து உண்டாகிற பற்பல விழுதுகளும் பருத்து வளர்ந்து நிலத்தில் வேர் பற்றி மறுபடி இவ்விழுதுகள் மரமாகி அவைகளில் இருந்து பற்பல கவர்கள்விடும். இவ்விதமாகவே ஆலமரம் எல்லா மரங்களிலும் விசாலித்ததாயும், நெடு நாளைக்கு இருக்கக்கூடியதாயும் இருக்கின்றது. ஆலிலைகளில் கருநாடக முதலிய தேசங்களிலுள்ள சனங்கள் கல்லைகள் தொன்னைகள் முதலியவற்றைத் தைத்துச் சாப்பிடுவதற்கேற்ற ஏனமாக்கிக்கொள்வார்கள். அதுவுமன்றி ஆலிலைகள் யானை முதலிய மிருகங்களுக்குத் தீனாய் இருக்கின்றன.

மருதோன்றி மரம் இந்து தேசத்திலுள்ள பற்பல தோட்டங்களிலும், பூஞ்சோலைகளிலும் உண்டு. கல்குத்தாவிலுள்ள தாபர விருக்க தோட்டத்திலும் இம்மரம் மிகுதி. இதிற் பலவகை உண்டு. அன்றியும் இதின் இலைகளை அரைத்து நகங்களிற் பூசிக்கொள்ளக் கொஞ்சநேரத்தின் பின் இரத்தச் சிவப்பாயிருக்கும். இவ்வழக்கங் கருநாடகத்தில்உண்டு. இம்மரத்தின் பூ வாசனையுள்ளதுமாய், வெண்மையுமாய் வேப்பம் பூவைப் போலிருக்கும். ஆகிலும் பற்பல நிறமான புட்பங்களைத் தருவதான பலவித மருதோன்றி மரங்கள்உண்டு. அவையாவன, வாடாப்பூவுள்ள மரங்கள், செம்பூவுள்ள மரங்கள், பச்சைப்பூவுள்ள மரங்கள், பொன்னிறப் பூவுள்ள மரங்கள், மேகவண்ணப் பூவுள்ள மரங்கள், பொன்னிறங் கலந்த கரும் பூவுள்ள மரங்கள், வெண்மையான பூவுள்ள மரங்கள் முதலியவைகளே. பிரிட்டிஸ இந்தியாவிற் குடியேறி இருக்கிற சீமையிற் பலசாதியாராகிய பிராஞ்சுக்காரர் உலாந்தாக்காரர், தென்மார்க்கர், போர்த்துக்கீசுகாரர் முதலிய வெள்ளைக்காரத் துரைமார் தங்கள் தோட்டங்களில் மருதோன்றி மரங்களை வட்டமாக வைத்து உண்டாக்கியிருக்கிறார்கள். வருஷத்துக்கொருதரம் எல்லா மரங்களிலும் வளர்ந்திருக்கிற இலைகளைச் சரிமட்டத்துக்குத் தறித்துப் போடுவதால், மருதோன்றி மரங்கள் யாதொரு கோணல் இல்லாமல் சரிநேராய்வளருகின்றன. இதுவே வெள்ளைக்காரர் வீடுகளிலுள்ள தோட்டங்களின் சிறப்பு.

மருதமரம் இந்துதேசத்தின் பல இடங்களிலும் வளருகிறதில்லை; அதுவும் பெரிதாய் வளர்ந்து வெகுதூரத்துக்கு விசாலித்திருக்கும். பூக்கள் மருதோன்றிப் பூக்களுக்கொத்திருக்கும். இலைகள் பன்னீர்மரத்தின் இலைகளைப் போலிருக்கும் நெடுநாளைக்கு நிற்கிற மரமாயிருந்தும் ஆலமரத்தைப்போல் விசாலித்ததுமல்ல, நெடுநாளைக்கிருப்பதுமல்ல. அதின் கொட்டைகள் வாணமுதலியவற்றைச் செய்வதற்குக் கூடும்.

இந்துதேசத்தின் பல இடங்களில்மூங்கில்வனங்கள்உண்டு. இம்மூங்கில்கள் ஓர்வித நாணலாய் இருக்கின்றன. ஐந்து மாதத்துக்குள்ளே அறுபதடி உயரத்துக்கு வளர்ந்து, சுற்றளவில் எட்டங்குலம் பருப்பமுள்ளவைகளாய் இருக்கின்றன, மூங்கில் முதல் வருடத்தில் மிகவுங் கதியாய்வளர்ந்து, இரண்டாம் வருடத்தில் வலுக்கொண்டு வயிரமாகின்றதினால் கட்டுவேலைக்கும், மற்றுந் தளபாடங்களுக்கும் ஏற்றதாயிருக்கின்றது. (௨௫) இலாச்சம் பரப்புக்கொண்ட தரையில் வைத்துத் தண்ணீர் வார்த்து வளர்க்க வேண்டிய விதங்களிற் சரியாகப் பிரயாசப்பட்டால் சுறுக்கில் இயாதொரு மரவருக்கத்தை (௨௱௫௰) இலாச்சத்தில் வைத்து உண்டாக்குகிறதிலும் அதிக மரத்தைக் கொடுக்கும். வடசருக்காரின் வடமேற்கு அந்தத்திலுள்ள இடங்கள் முழுதும் மூங்கில் வனங்களாக இருக்கின்றன. இம்மரங்கள் ஒன்றோடொன்று பிணைந்திருக்குஞ் சில காலங்களில் மூங்கிலோடே மூங்கிலுரிஞ்சி நெருப்புப்பற்றி எரியும். வடசருக்காரிலுள்ள சனங்கள் முற்காலத்திற் சத்துருக்கள் வந்து தங்கள் சீமையைப் பிடித்துக்கொள்ளாமல் இம்மரங்களினால்த் தேசத்தைச்சுற்றிக் கோட்டை மதில் கட்டியிருந்தார்கள். இப்பொழுது பிரதானமாக மாரிகாலத்தில் இப்படிச் செய்வது வழக்கம். கோடைகாலத்தில் இம்மரங்களினால் நெருப்புப்பற்றிச் சேதத்தை உண்டாக்கும். இந்தியர் இம்மரங்களை வெட்டிக்கொண்டு போய்த் தங்கள் வீடுகளைக் கட்டுவார்கள். இம்மரம் பலவித தளபாடங்களுக்குங் கூடும். பல்லக்கு முதலியவற்றைச் செய்வதற்கேற்ற நல்ல மூங்கில்கள் ஒரிசா (Orissa) நாட்டிலுள்ள தோலக்கான் (Tolcan) இந்தால் (Hindole) முதலிய இடங்களில் வளருகின்றன. ஆனி மாதம் இம்மரங்கள் முளைத்தெழும்புவதற்கேற்றகாலம். அத்தனத்திற்றானே சனங்கள் வளைவான கொம்புகள்தண்டிகை முதலியவற்றிற்கேற்ற நீட்சியும், வளைவுமுள்ளவைகளாய் இருக்கும்படி இளமையிற்றானே வேறொரு மரத்தை நாட்டித் தொடுத்துக் கட்டிவைப்பார்கள். கோடைகாலந் துவங்குகையில் இக்கொம்புகளின் நுனிகளை வளராதபடிக்குத் தறித்துப்போடுவார்கள். அதினாலே மரக்கொம்புகள் வயிரமாயும், வலிமையாயும் உரங்கொள்ளும். சில இடங்களில் இக்கொம்புகளின் நுனியிலுள்ள குருத்தைச் சனங்கள் பிடுங்கித் தின்பார்கள். இம்மரத்திலிருந்து வடிகிற ஒரு விதமான தடித்த சாற்றை (Tabasheer) மருந்துடன் கலந்து குடிப்பார்கள். இச்சாற்றை மருந்துடன் சேர்த்தபின்பு அதற்கு லத்தின் பாஷையிலே (Hydrate of Silica) எனப்பெயர். முதல் உண்டாகிற சிறுகிளைகளைச் சனங்கள் வெட்டிக்கொண்டுபோய் ஊன்றுகோலாகப் பாவிக்கிறார்கள். பலவித மரப் பாத்திரங்களும் மூங்கிற் கொம்புகளாற் செய்யப்பட்டிருக்கின்றன. இப்பாத்திரங்களில்த்தண்ணீரை நிரப்பி வைத்தால் எப்பொழுதுங் குளிர்ந்துகொண்டிருக்கும். அதுவுமன்றிக் கருநாடகத்திலுள்ள வியாபாரிகள் இக்கொம்புகளினால் நாழி முதலிய அளவைகளை உண்டாக்கிப் பாவித்து வருகிறார்கள். இவ்வழக்கம் மதுரையிலுமுண்டு. இன்னும் பலவகையான மூங்கில்கள் (Arundo Calamus &c.) பல இடங்களிலும் உண்டு. (இன்னும்வரும்.)

கூட் என்பவர் செய்த பிரபஞ்ச நூல்.

[ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.]

முதற் பிரிவு—௰. அதிகாரம்.

மிருகசடத்திலுள்ள என்பு, பல், மயிர் முதலிய உரமும் வயிரமுமான கூறுகளைப்பற்றி.

௧. மேலை அதிகாரத்தில் மிருக இயக்கக் காரணங்களையும், விதத்தையும் பற்றிச் சிறிதளவுக்கு வெளிப்படுத்த முயன்று, தசைநார் அல்லது தசை, சில புறக்காரணத்தினால் அல்லது மூளையிலிருக்கும் மனச் சித்தத்தினாற்றொழிலுக்குச் சேட்டிக்கப்படும் வழியைக் காட்டினோம்.

௨. தசைநார் மிகவும் முயற்சியும் சில தருணங்களில் அஞ்சத் தக்க வலிமையுமுடையதாய் இருக்கிறதென்று கண்டோம். ஆனாலும் மனிதருக்கும், மிருகங்களுக்கும் இயக்கத்தையும், தொழில் முயற்சியையும் உண்டுபண்ணும் ஏதுக்கள் தசைநார்மாத்திரமல்ல. அவைக்குக் குருத்தென்பு, சவ்வு, தந்தம் முதலான ஏதுக்களுமுண்டு. இவைகளை ஆராய்ந்து பார்ப்போம்.

௩. என்புகள், சடத்தினது சட்டச்சேர்வையாய் இருந்து முற்றின காலத்தில் உரமும் வலிமையுங்கொள்ளும். பிள்ளைகளுக்கும் விடலை மிருகங்களுக்கும் உள்ள என்பு உரப்புள்ளதல்ல. ஆனாலும் வரவர உரப்பாகின்றது. அப்படியாதற்கு என்பின் பசைப்பற்றிற் சேருகிற வலது சுண்ணம். மட்டிச் சிப்பிகளும், கவாட்டிச் சிப்பிகளுங்கூடச் சுண்ணச் சாந்தினாலே உண்டாகின்றன.

௪. உள்ளபடி பார்க்கில் குருத்தென்புகளுஞ் சவ்வுகளும் மிருதுவான என்புதான். அதாவது, அவை துவக்கத்தில் என்புப் பதார்த்தமாய் நுங்குபோன்றிருந்து ஒவ்வொரு விதமுஞ் சுண்ணச்சேர்வையினால் உரப்பாகின்றது. மிருக என்புகளும், ஓடுகளுஞ் சரீரத்தில் உட்பட்ட சுண்ணத்தில் மிகுதியை உண்டு, குருத்தென்பு, சவ்வுகளைப்பார்க்கிலும் அதிக உரமும், வலிமையுமாய் வளருகின்றன.

௫. என்றாலும், சுண்ணமானது, ஒருக்காலும் மிரு

Digitized by Google

..ச் சடத்திற் சுத்தநிலையாய்க் காணப்படவில்லை. அது
..திற் சுத்தமாய்ச் சேரவில்லை. ஏனென்கில் ஒரு மிரு
..முஞ் சுண்ணத்தைத் தின்னுகிறதில்லை. அது ஒன்றில்
..டிக்காரத்ததாய அல்லது இருந்தைத் திராவக நீரான
..ரு திராவகத்தோடு கலந்ததாய்க் காணப்படுகின்றது.
..னபடியால் அது சுண்ணக்காரமென்றுஞ் சீமைச் சு
..ணாம்பாகிய சுண்ண இருந்தையென்றுஞ் சொல்லப்
..டுகின்றது.

௬. என்புகள், சிப்பிகள், பல்லு, குருத்தெலும்பு, மீன்
..செகிள்களுக்கும், வண்டு முதலான மற்றுஞ் சில பூச்சி
..ளை மூடியிருக்கும் உரப்பான ஓடுகள் என்பவைகளு
..குமுள்ள பிரதான வித்தியாசம் இவ்விருவகைத் திரா
..த்தினது சுபாவத்தின் வித்தியாசத்தினால் உண்டாகின்
..து. உரப்பான மிருக பதார்த்தங்களில், ஓடுகளிற் பார்
..க என்பிலும், என்பிற் பார்க்கப் பல்லிலும் விசேடமா
..ப் பல்லின் புறத்தகட்டிலும் அது அதிகஞ் செறிந்திரு
..கின்றது. சகலத்திலும் பார்க்க யானைத்தந்தத்திலோ அ
..கமாய் இருக்கின்றது. இவையெல்லாங் கொஞ்சங் கு
..றையத் தீர்க்கமான சுண்ணக்காரமாய் இருக்கின்றன.

௭. மிருக என்புகளில் நூதனமான ஓர் வேற்றுமை
உண்டு. மனிதனிலும் விலங்கிலும் உண்டான என்புகள்
..யிரிப்பும் உறுதியும் வசையாதவையுமாய் இருக்கின்ற
ன. சருப்பங்களிலும் மீன்களிலும் உண்டான என்புக
ள் பதமையும் வசையத்தக்கவைகளுமாயிருக்கின்றன.
..டைசியாய்ச் சொல்லப்பட்டவையில் என்பிலே ப
..சைப்பற்றுக் கூடியுஞ் சுண்ணக்காரம் குறைவாகவும்
உண்டு. இவ்விருவகைப்பட்ட பதார்த்தங்களின் அள
வை விகற்பிக்கிறதினால் ஒவ்வொரு மிருகமுந் தன் தன்
சுபாவத்துக்கு ஏற்ற என்புள்ளதாகின்றது. இது சி
ருட்டிகருடைய பிழைபடா ஞானத்தையும், நன்மை
யையுங் காட்டுமொரு அதிசயமான அத்தாட்சியல்லவா?

௮. பட்சிகளின் என்புகள் உட்டுளையுள்ளதாய் மூச்
சுக் குடலுடனே பொருந்தியிருக்கும். இதற்கு நியாய
ந் தெளிவாயிருக்கின்றது. எப்படியெனில் என்புகளும்,
தூவிகளுஞ் சுரமுள்ளனவாய் இருப்பதினால் இலகுவும்
அதிக பலமுமுள்ளனவாயிருந்து மூச்சுக்குடல் வழியா
ய் வாயுபோய் நிரம்பச் சிறையடிக்கொள்ளும் பொழு
து ஆகாயத்திற் சுகமாய் எழும்பி விடுகின்றன.

௯. தந்தமும் என்பைப்போலக் கிட்டத்தட்ட அவ்
வளவு, சாங்கத்திலும், இருப்பிலும் வித்தியாசப்படுகின்
றது. அலகென்புள்ள மிருகங்களுக்குப் பற்கள் தத்தம்
உறையிலே அசையாது நிலைபெற்றிருக்கும். அப்படி
யிருந்துஞ் சில பிறநீங்கலுமுண்டு. என்னவெனில் கங்
கேரோவென்னும் மிருகம் தானினைத்தபடி முன்வாயி
ற் கீழ்ப்பல்லிரண்டையும் பிரித்துக் கொள்ளத்தக்க வ
ல்லமையுள்ளதாயிருக்கின்றது. இம்மிருகம் பலகாரிய
ங்களில் மிகவும் விசேடித்ததாயிருக்கின்றது.

௰. சுறவிலும் மற்றுஞ் சில மச்சங்களிலுமுள்ள ப
ல்லு அசைவுள்ளதாயிருக்கின்றது. இவைகளுக்கு அல
குக்குரிய குருத்தெலும்புகள் மாத்திரமுண்டு. நீர்ச்சூற
னுக்கு நான்கு பற்கள்மாத்திரமுண்டு. அதுவும் அதின்
மூஞ்சியிலே இருக்கும். அது நினைத்தவேளைகளில் அ
வற்றை வெளியே நீட்டவும் உள்ளேவாங்கவுந்தக்கதாயி
ருக்கின்றது. அநேக மிருகங்களுக்குப் பல்லில்லை. அ
வை அதற்குப்பதிலாய் அலகுகளையும் நாவையும் தொ
ழிற்படுத்தி வருகின்றன. பட்சிகளும் சில பூச்சிகளும்
இப்படிச்செய்யும். அவை இன்னவையென்று அவைக
ளினுடைய வாட் பற்போற்பிரிந்த தாடையினாற் கண்டு
கொள்ளலாம்.

௰௧. புல்மேய்கிற மிருகங்களின் நாவும் அப்படியே
கெத்துள்ளதாய் இருக்கும். பூனை வருக்கத்தின் நா மு
ள்ளுப்பற்றினதாய் இருக்கின்றது. லம்பிறையென்ற மீ
னுக்கு நாக்கெல்லாம் பல்லு. செம்பாரை நண்டுக்கு
ம் வெள்ளை நண்டுக்கும் இரைக் குடரிலே பல்லு. அல
கும் பல்லும் ஒவ்வொன்றிலும் வித்தியாசமாய் வைத்தி
ருக்கிறபடியால், அப்படிப்பட்ட வித்தியாசமான குல
ங்களின் சுபாவத்துக்குஞ் சஞ்சரிப்புக்கும் வசதியாய்
இருக்கின்றது.

௰௨. தோலுந் தோலிலுள்ளவைகளும் பலபேதமா
ய் இருக்கின்றன. வாளுக்குங் குண்டுக்கும் அரூத கடு
மையும் வலிமையுமுள்ள காண்டாமிருகத் தோல் ஆதியா
க மிருதும், ஐதும், நொய்துமான சிட்டுக்குருவியின்
தோல் ஈறாய் இப்படிக்காணும். குதிரை, ஆடு, மாடுமுத
லியவைகளின் தோல் இழுக்க ஈந்து கொடுக்கிறதுமாய்
பதனிட்டு வாராக்கக் கூடியதுமாய் இருக்கின்றது.

௰௩. தோலினது நிறந் தோற்படைக்கும் மேற்
றோலுக்குமிடையே பரவியிருக்கிற நீர்ப்பற்றான வழு
வலினால் உண்டாக்கப்படுகின்றது. அந்த நீரானது பலவ
ன்னத்தை உடையதாய் வெண்ணெய்போன்ற பதார்த்
தமாயிருந்து, தன்னுடைய நிறமேதேதோ அவ்வவ் நிற
ங்களையே தோலில் உண்டுபண்ணுகின்றது. அண்டங்கா
க்கைகளினது கால் விரலில் அந்நீர் கறுப்பாயும், மயி
ற்பட்சியில் நரையாயும், நீர்ப்புள்ளிற் பச்சையாயும், க
ழுகில் மஞ்சனிறமாயும், கொக்குவகையில் இளநீலமா
யும், காட்டுக்கோழியிற் சிவப்பாயும் இருக்கின்றது. வ
ண்ணாத்திப்பூச்சிகளின் செட்டைகளும் மீன் செகிளும்,
வண்டோடுகளும் இந்த நீரினாலே வன்னங்களைப் பெ
றுகின்றன.

௰௪. மனிதருடைய தோலுங், கண்களுங்கொண்டி
ருப்பதாகிய பலவன்னங்கள் இந்தப் பதார்த்தத்தினா
லே தான் உண்டாகின்றன. அப்படியிருந்தும், தோ
லினது நிறஞ் சூரியனுடைய கதிரினாலுங் காங்கையி
னாலும் வேறுபாடு அடைகின்றது. அது ஏதோ ஒரு
வழியினாலே அந்நீரின் நிறத்தை மாற்றிப் போடுகின்
றது.

Digitized by Google

௧௫. மேற்றோலானது தோற்பட்டையிலுள்ள பல அடுக்கில் மென்மையுள்ளதாகிய வெளிப்படைதான். புற்றத்தி, சருப்பம், சிலந்திப் பூச்சி முதலான சில வகை மிருகங்கள் இந்த மேற்றோல் என்னுஞ் சட்டையை வருடாந்தங்களிற் கழற்றிப்போடுகின்றன. இது போலச் சில வகை விருக்கங்களினது மேற்றோற் பொருக்கும் வருடாந்தஞ் சொரிந்துபோகின்றது. திருட்டாந்தமாக, மேற்கு இந்தியாவிலுள்ள பிலேன் என்னு மரம் வருடம் ஒரு முறை புதுப்பட்டை வைக்கும்.

௧௬. தோலில் இருந்து அதைக் காப்பாற்றி அலங்கரிப்பதாகிய பல வகையான பதார்த்தங்கள் உண்டாகின்றன. அவ் வகைகளில் விரல் நகம், பட்சி நகம், கொம்பு முதலானவைகள் அதிக உரப்பானவை பாதுகாப்புச் செய்கிறதாய் இருக்கின்றன. அலங்கரிக்கிறவை, தலைமயிர், ஆட்டுமயிர், பட்டு, இறகு முதலானவை. தலைமயிரும் ஆட்டுமயிரும் பெரும்பாலும் ஒரே தன்மையுள்ளதாய் இருக்கின்றன. மிருகங்களுக்கு இயல்பானது கொடுக்கின்ற மிகுந்த வழகான உடை, அவற்றினிறகுதானே.

௧௭. ஆடவர்கள இஸ்திரிகள் மிகுந்த வேடிக்கையாய்த் தோற்றப்பட விரும்பி, பட்சி இறகுகளினாற் சிறிதுவேளைகளில் தங்களை அலங்கரித்துக்கொள்ள, அந்தப் பட்சிகள்தானே தங்களுடைய வேடிக்கையான உடையைப் பற்றிப் பெருமைகொள்வது ஆச்சரியமல்ல. அது சின்னத்தனமும், வீணுமாயிருக்கின்றது. என்றாலுந் தன்னுடைய தொப்பியிலே ஒரு பட்சியிறகைச் செருகுகிறவன், அல்லது செருகுகிறவள் அந்த இறகைச் சிருட்டித்தவருடைய அபூருவமான தொழிலையும், அது சேர்ந்திருந்ததான பட்சிசாதியினது பழக்கங்கள் சரித்திரங்களையும் அழுத்திச் சிந்தித்துப்பார்த்திருந்தால் மிகவும் பிரயோசனம் உண்டாகும். அப்பொழுது ஒரு ஆளுடைய தலையின்மேல் ஓரிறகைக்கண்டால் அந்த ஆளுடைய மனதிலே ஓர் கருத்திருக்கின்றதென்று அறிந்து கொள்ளலாம்.

[The following article is the original of the foregoing.]

ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

On the hard and solid parts of the animal frame, such as the bones, teeth, &c.

PART I.] [CHAPTER. X.

1. In the last chapter, we endeavored to explain somewhat respecting the causes and manner of animal motion, showing how the muscles or flesh were incited to action, either by some outward cause, or by the will of the mind which is in the brain.

2. We found the muscles were very active, and often terribly strong; but muscles are not all the instruments of motion and action which men and animals possess. They have bones cartilages, ligaments and other instruments, such as teeth, bones, and so on, which we will examine.

3. The bones are the frame-work of the body; they are hard, as well as strong, when fully formed. In children and young animals, however, the bones are not hard; but they become so by degrees, and lime is the substance which enters into the gluten of the bones as they harden. Lime also makes the shells of oysters and of all shell fishes.

4. Cartilages and ligaments are, properly, soft bone, that is, they are at first of the same substance as bone, a kind of jelly, and each kind hardens by the addition of lime; but as the bones and shells of animals absorb the greatest share of lime taken into the system, they grow firmer and harder than cartilages and ligaments.

5. Lime, however, is never found in the animal system in its pure state; it is never taken into it pure; for no creature eats lime. It is found combined with an acid, either phosphoric or carbonic acid gas; and hence it is called either phosphate of lime, or carbonate of lime, common chalk.

6. It is the difference in the nature of these two acids that chiefly makes the difference between bones, shells, teeth, bone, fish-scales, and the hard substance that covers beetles and some other insects. The hardest animal substances have the largest proportion of phosphate of lime; bones have more of this than shells have, and teeth, the enamel particularly, have more than bones; but the ivory tusks of elephants have most of all. These are almost wholly phosphate of lime.

7. There is a curious difference in the bones of animals. In man and quadrupeds, they are hard, firm and unbending; in serpents and fishes, they are softer and more supple; these last have a great proportion of gluten in their bones, and but a small part of phosphate of lime. Thus by varying the quantity of these two kinds of matter, every animal is provided with bones exactly adapted to its nature. And is not this a wonderful proof of the unerring wisdom and goodness of the Creator?

8. The bones of birds are hollow, and communicate with the lungs. The reason of this is clear. The bones and quills, being made hollow, are lighter and stronger, and, when filled with air from the lungs, they are more easily raised in the air by the motion of the wings.

9. The *teeth* vary in their form and position almost as much as the bone. Those animals which have jaw-bones usually have teeth fixed immoveably in their sockets. But there are some exceptions; the ***kangaroo*** has the power of separating, when it pleases, the two lower teeth of the front jaw. The animal is a very extraordinary one in many respects.

10. In the shark, and many other fish, the teeth are moveable; these have only jaw-cartilages. The sea-mouse has only four teeth, and these are on its snout; it can extend or draw them in at pleasure. Many animals have no teeth, but use the jaws and tongue instead; birds do this, and some insects also. You can tell such, because their jaws are serrated or saw-like.

11. The tongues of animals that eat grass are likewise serrated. In the cat kind, the tongue is covered with strong prickles; in the lamprey, the tongue is covered with teeth: while in the crab and lobster tribe, the teeth are placed in the stomach. In each different manner of placing the jaws or teeth, the nature and habits of each different tribe of animals is provided for.

Digitized by Google

12. The *skin and its appendages* offer a great variety; om the rhinoceros, which has a skin so hard and tough that cannot be pierced by sword or bullet, to the little wren hose skin is soft, thin and tender as muslin. In horses, ıeep, and cattle it is elastic, and capable of being made into ather.

13. The color of the skin is formed by the *mucous web* · pigment, which is spread between the true skin and the ıticle or scarf-skin. The pigment is a mere butter-like subance of different colors, and thus gives a different color to ıe skin, according to its own hue. In the toes of ravens, it black; in peacocks, gray; green in the water-hen; yellow in ıe eagle; orange in the stork, and red in the woodcock. The ings of the butterfly are colored by this pigment, and so re the scales of fishes and the shells of beetles.

14. The different colors, and shades of colors of the huıan skin and eyes, are attributed to the same material. Howver, the color of the skin is much influenced by the light nd heat of the sun. In some way, this alters the color of ıe pigment.

15. The cuticle or scarf-skin is the outermost or the thinıest of the layers which form the skin. Some tribes of aninals throw this off every year, as grasshoppers, serpents and piders. There are certain trees that likewise throw off their uticle-skin annually—the West India plane-tree, for examıle—and as regularly renew it.

16. From the skin shoots forth a variety of substances which either protect or adorn it. The harder kind, which serve chiefly to protect, are nails, claws, horns; the softer and ornamental, are hair, wool, silk and feathers. Hair and wool are much alike in their properties; feathers are the most beautiful covering nature has given to animals.

17. It would not be strange if birds were vain of their gay attire, for men and women, when wishing to appear in their gayest style, often decorate themselves with the feathers of birds. This is a silly vanity; but it might be made very useful if every one, who puts a feather in his or her cap, were obliged to study the curious workmanship of the feather, and the habits and history of the species of birds to which it belonged. Then, when we saw a feather on a head, we might be sure there was an idea in the head.

[From Williams' Missionary Enterprizes in the South Seas.]

தென்சமுத்திர தீவுகளில் நடந்த சங்கதிகள்.

இதற்கு முன் இத்தீவுகளிற் பிரயாசப்படவந்திருந்த குருமாரோடே நானும் உடன் வேலையாளாக (௲௮௱௰௭ம்) ஆண்டு வந்து சேர்ந்து (சேசாயுத்தி,) தீவுகளுக்கு நடுப்புறமாகவுந், (தகத்தியன்) தீவுக்குப் பத்துக் காதத்துக்கு அப்பாலுமிருக்கிற (இராயதத்தியா) என்னுந் தீவிலே தேவ ஊழியத்தை நடத்தத் தொடங்கினேன்.

(சேசாயுத்தி) (தகத்தியன்) தீவுகளைக் குறித்து அனேகர் கேள்விப்பட்டிருப்பதினால் அவைகளை விட்டு தேவ ஊழியம் புதிதாய் ஏற்படுத்தப்பட்ட (நாவிக்கேற்றேன்) என்னுந் தீவுகளைக் குறித்துச் சொல்லுவேன்.

(எம்வி) என்னுங் கூட்டமான தீவில் ஏழு தனித் தனித் தீவுகள் உண்டு. அவை, (மாகிமித்தியாரோ, அதுவி, மங்காவி, இராயதோங்கி, எம்விதீவு, அகத்துதாகி) என்னப்பட்டவைகளே. இவைகள் (தகத்தியன்) தீவுக்கு (௫௰-௯௰) காதத்துக்கு அப்பாற் கிடக்கின்றன. அவைகளிலே (௰௩) குடிசனங்கள் இருக்கிறார்கள். அவைகளை நானும், என் கூட்டாளியாகிய போன் துரையும் (௲௮௱௨௰௧ம்) ஆண்டு போய் அறிய முன்னமே அவைகளின் விபரம் ஒருவருக்கும் அதிகந் தெரிந்திருக்கவில்லை.

இந்தத் தீவுகளில் உண்டாகிற ஒரு வியாதியினாலே (௲௮௱௨௧ம்) ஆண்டுக் கடைசியிலே நானும் என் மனைவியும் மெலிந்தவர்களாய் இருந்தோம். இந்த வியாதியை மாற்றுவதினாற் சனங்களுக்கு அதிகம் நன்மை செய்யக்கூடுமென்றறிந்து சுகமடையும்பொருட்டுக் கப்பலேறி (நியுசவுதுவேல்சு,)க்குப்போவது நல்லதென்று எண்ணி (அத்துதாகி) தீவில் இரண்டு கிறிஸ்த உவாத்திமாரை நிறுத்த வேண்டியதால், இவ்வூர்ப் பிறந்தவர்களில் இரண்டு பேரை எங்களுடனே கூட்டிக் கொண்டு போவதற்குத் தீர்த்தோம்.

எங்களுக்காகுதல், எங்களுடனே வருகிறவர்களுக்காகுதல் செலவில்லாமற் கொண்டுபோவேனென்று கப்பலின் முதலாளி சொன்னதினால் அக்காரியத்தைச் சபையாருக்குச் சொன்னோம். அவர்களும் அதை மெச்சிக்கொண்டு (பப்பியன், வாருபத்தா) என்னப்பட்ட இருவரையுங் கூட அனுப்பும்படி தெரிந்தார்கள். இந்தப் (பப்பியன்) மிகவும் பிரயாசியும் பல காரியத்துக்குங் கூடியவனுமாய் இருந்தான். இவனுடைய சரித்திரம் இனிமேல் விபரமாய்ச் சொல்லப்படும். நாங்கள் (இராயதத்தியா)வில் இருந்து பிரயாணம்புறப்படுகிற நாளில் ஒரு செபக்கூட்டம் வைத்து அத்தருணத்திலே இந்த இரண்டு பேருக்கும் நியமித்த தேவ ஊழியத்தைப் பற்றிச் சனங்கள் பிரமித்துப் பராபரனுடைய வசனத்தைப் பிரசங்கிக்கிற வேலையைக்குறித்துக் கவனமாய்ப் பார்க்கத் தொடங்கினார்கள். இந்தச் சமயத்தில் (இராயதத்திரியா) தீவுக்குத் தெற்காக (௩) காதத்துக் கப்பால் இருக்கிற (உருத்தா) தீவில் ஒரு தொற்றுவியாதி உண்டுபட்டு அந்தத் தீவாரில அனேகரைச் சங்கரித்துக்கொண்டு வருகையில், அவ்விதமான கேடுபாடுகள் துட்ட தேவதைகளினால் உண்டாகின்றனவென்று தீவார் எண்ணுவதினால் அவைகளின் முனிவுக்குத் தப்பிக் கொள்ளும்படி அந்தியாருக்குள் தயிரியமுள்ள இரண்டு பிரதானிகள் ஒவ்வொரு பெரிய தோணியைக் கட்டி அதில் ஏறி எவ்விதத்தினும் வேறு தீவுக்கு ஓடித் தப்பவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

தாங்கள் மேலும் அந்தத் தீவில் இருக்கத் துணிந்தால் அந்தத் துட்ட தேவதைகளின் கோபத்தை யாவராலும் ஆற்றமுடியாத படியால், மெய்யாய் அவர்களால் அடிக்கப்படுவோம் என்றுணர்ந்து சமுத்திரத்தின் ஆழத்தைற் கடற்கொந்தளிப்பினால் அமிழ்ந்தினாலும்வேறு தீவுக்குப் போயச் சேர வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார்கள்.

இப்படி எல்லாம் முஸ்திப்பாக்கின பின்பு (ஆகூறு) என்பவனும் அவனைச் சேர்ந்தவர்களுந் தங்கள் தோணியைக் கரையை விட்டுக் கடலிலே தள்ளிப் பாயைவிரித்துத்துட்ட தேவதைகள் வாசம்பண்ணி வருகிறார்களென்றெண்ணப் பட்ட தங்கள் அரிமையான தீவை விட்டுத் (தபுகாவி) தீவிற்போய்ச் சேர்ந்தார்கள்.

சிலநாட் சென்றபின் தங்கள் தீவில் இருந்த வியாதி தணிந்து போமென்று நம்பித் திடங்கொண்டு பாய் இழுத்துத் திரும்ப ஓடிப்போகையில், தாங்கள் இருந்து புறப்பட்ட தீவின் மலைச் சிகரம் மறையாத அவ்வளவு தூரத்துக்குள்ச் சமுத்திரமுங் காற்றும் மும்முரமாகி, இவர்கள் போகவேண்டிய ஊருக்குப் போகவிடாமல் அத்தோணியை மறு திசைக்குப் போய் ஒதுங்கப்பண்ணிற்று.

ஒரு தோணிக்காரரில் அநேகர் இறந்தார்கள். (ஆகூறும்) அவனைச் சேர்ந்தவர்களும் ஏறினதோணியோ கரை தெரியாத ஆழிய சமுத்திரத்தில் மூன்று கிழமையாக இன்ன தேசம் ஏதுதேசம் என்று அறியாமற் புயலினாலே மோதுண்டு சமுத்திரத்திற் திரிந்தது. இப்படி ஆபத்தான வேளையில் இவர்களுக்குப் போசனமுந் தண்ணீரும் இல்லாதபடியினாலே மிகுதியாய் உபத்திரப்பட்டார்கள். இப்படி இருக்குஞ் சமயத்திற் காற்றைத் தமது கைப்பிடியில் அடக்குகிறவருந் தண்ணீர்களைத் தமது கைப்புழையால் அளக்கிறவரும் பூதியங்கள் எல்லாவற்றுக்குங் காரணருமான கடவுள் இவர்களுக்கு வழிகாட்டியாய்ச் (சேசாயுத்தி) தீவுகளிற் சேரும்படி செய்தார். இந்தத் தீவுகளுக்குச் சேர்ந்த (மாரு) என்னப்பட்ட சின்னத் தீவின் கற்பாரில் இவர்கள் தோணி வந்து பொறுந்தது. அன்றைப்பிற்றினம் அந்த இடத்தில் அவர்கள்வந்து சேராவிடில் எல்லாரும் இறந்துபோவார்கள்.

அப்பொழுது (மாரு) தீவிற் குடிசனங்கள் தோணியால் மிகுந்த உபத்திரப்பட்டுக் கிடந்தவர்களுக்குப் பலன் வரும்படியாய் அவர்கள் அறிவுகேட்டை மாற்றிப் பராமரித்தார்கள்.

அறிவு வந்ததின்மேல் இவர்கள் தங்கள் தீவிற் சம்பவித்த வியாதியின் உபத்திரங்களையும், தாங்கள் அதற்குத் தப்பி ஓடினதையும், மறுபடி அந்தத் தீவுக்குத் திரும்புகையிற் தங்களுக்கு நேரிட்ட கப்பற் சேதத்தையும் எடுத்துச் சொன்னார்கள். அப்பொழுது (மாரு) தீ

Digitized by Google

வாருந் தாங்கள் முன் அந்த வகையான துட்ட தேவதைகளை வணங்கினதினாற் தங்களுக்கு வந்த கேடுபாடுகளை அறிவித்ததுமல்லாமற், தாங்கள் இப்பொழுது மெய்யான பராபரனை வணங்கி வருகிறவர்களென்றும், விக்கிரகாராதனைக்காரரல்லவென்றும், அதற்குத் திருட்டாந்தமாகத் தாங்கள் அடித்து உருக்குலைத்த விக்கிரகங்களைக் காண்பித்துக் கிறிஸ்துமார்க்கம் அவர்களுக்குள்த் தலைப்பட வந்த விதத்தையும் துட்பமாய்ச் சொன்னார்கள்.

இதைக்கேட்டவுடனே கிறிஸ்து மார்க்கத்துக்குஅன்னியராயிருந்த இவர்கள் வெள்ளைமனிதர் தங்களுக்காகக் கப்பலேறிப் புற ஊரில் இருந்து வந்து மேலான காரியங்களைத் தீவார் சகலருக்கும் அறிவிக்கிறார்களென்றும், இந்த வேளையிலும் அதை அறிவிக்கிற குருமார் அடுத்த தீவுகளுக்குப் போயிருக்கிறார்களென்றுங் கேள்விப்பட்டு உடனே அந்தத் தீவுகளுக்குப் போகப் புறப்பட்டார்கள். வளமான காற்றைக் கண்டவுடனே (ஆகூறு)வும், அவன் கூட்டத்தாரும் மறுபடி பாய்வலித்துத் தாங்கள் கேள்விப்பட்ட இந்தப் புதுப்போதனைகளைக் குறித்து அதிகமாய்ச் சொல்லக்கூடிய அவர்களைத் தேடிப் போனார்கள். போகையிற் (போற்போர்) என்னப்பட்ட கரை இவர்களுக்குப் பழக்கமில்லாததினாலே வழி தப்பி (இராயதத்தியாவிலே) தோணி போய்ச்சேர்ந்தது. இங்கேவந்துசேர்ந்த இடத்திலும் அத்தீவாரின் நிலைபரத்தை மிகுந்த அதிசயத்துடனே பார்த்தார்கள். மேலும் அவர்களுக்குள் வெள்ளை மனிதராகிய குருமாரும் அவர்கள் சமுசாரமும் இருக்கிறதையும்,தீவாருடைய உடை, நடை, பாவனைகள், ஐரோப்பையாருடையவைகளுக்கு ஒத்திருக்கிறதைஞ் செய்கைத்தொழில்களில் தேறியிருப்பதையும் ஓய்வுநாட்களிற் சனங்கள் கூடித் தேவாராதனை நடப்பிக்கிறதையும் மெய்யான பராபரனைத் தோத்திரிக்கிறதையுங் கண்டு அதிசயித்து யாவையுங் கவனமாய்ப் பார்த்தாகள். இவைகளுக்கெல்லாம் அன்னியராயிருந்த அவர்களுடனே கிறிஸ்துமார்க்கத்தின் மேன்மை எவ்வளவு பெரிதென்று உ ர்ந்ததுமன்றிப், பராபரன் தங்களைத் தற்செயலாய் இந்த விள கப்படாத காரியங்களை அறியும் பொருட்டாகவே அவ்விடத்தி ரப்பண்ணினாரென்றும், இனைத்து நாங்கள் தங்களுக்குப் போத பண்ணும்படியும், எங்கள் பராமரிப்பின்கீழே தாங்கள் இருக்கு டியுங் கேட்டுக்கொண்டார்கள்.

அப்பொழுது நாங்கள் அவர்களுக்குச் சில மூலபாடங்களைப் ப்பிக்கும்படி எங்கள் சபையின் மூப்பர்கையில் ஒப்புக்கொடுத் ம். (ஆகூறு) என்பவன் மற்றவர்களிலும் மிகவுஞ் சுறுக்குப்பன் ப் படிப்பிலே முந்தினான். கொஞ்ச நாளைக்குள் அவன் எழுத் பேர்ப் புத்தகமும் முடித்துக் கேள்வி மறுமொழிகளில் மிகுந் ன பங்கை வாய்ப்பாடமாய்ச் சொல்லக் கூடியவனாகி மத்தேயு சேஷம் வாசிக்கத் துடங்கினான். இவனும் இவனைச் சேர்ந்தவர் எல்லாரும் எங்களுடனே மூன்று மாதமுஞ் சொச்சநாளும் இரு பின் தங்கள் தீவுகளுக்குப் போனார்கள். (ஆகூறு)வும் வேறனேக ம் எழுத்து அல்லது எழுத்தின் வடிவம் இன்னதென்று முன் அறி தவர்களாய் இருந்தும் இவ்வளவு மாதத்துக்குள்ளே கெட்டியா வாசிக்கவும் எழுதவுங் கற்றுக் கொண்டார்கள்.

(ஆகூறு) என்பவன் தனது தீவுக்குப்போய் அவ்விடத்திலுள்ள ன் இனத்தவர்களுக்குந் தன் ஊராருக்கும் மெய்யான பராபர றித்தும், அவருடைய குமாரனாகிய யேசுக்கிறிஸ்துவைக் கு தான் அறிந்திருக்கிற அறிவைப் போதிக்கும்படி தனக்குள் இரு ற விருப்பத்தை எங்களுக்கு அடிக்கடிசொல்வான். மேலுந் தன் சிற் பரம்பின வியாதியினாலே தன் இனத்தவர்களிலுஞ் சிநேகிதர் லும் அநேக ஆத்துமாக்கள் இறந்துபோய் விடுமென்று துக்கத் டும் மிகுந்த உருக்கமான வார்த்தையோடும் பேசினான்.

[இன்னும் வரும்.]

விலங்கியல்.

வித்தியாசமான நடையுடைய மிருகங்களை இளமையிலே பிடித்துப் பழக்குவதினால் வரும் பலன்.

[The effect of early training on animals of different habits.]

உலந்தன் நகரியைச் சேர்ந்த தேமிஸ் என்ற ஆற்றங்கரையில் ஓர் கூடு இருக்கின்றது. ஐந்தடி சதுரமான அந்தக் கூட்டுக்குள் மிருகங்களும், பட்சிகளும் விட்டு அடைக்கப்பட்டிருக்கின்றன. அதற்குள்ளே இருக்கும் பூனை, பூனைக்குட்டி, எலி, இரண்டு சுண்டெலி, அடைக்கலான்குருவி, பருந்து, வெள்ளை முயல், பன்றிக்குட்டி, ஆந்தை நாகணவாய்ப்புள், புறு என்றவைகள் ஒன்றுடனே ஒன்று ஐக்கமாகவும், நேசமாகவும் இருக்கின்றன. இவைகளில் மிகுதியம் பலமற்றது பலமுள்ளதற்குப் பயப்படுவதுமில்லை. பலமுள்ளது பலமற்றவைக்குத் தீமைசெய்வதுமில்லை. வெள்ளை முயலும், புறுவுந் தங்கள் கூடுகளுக்கான மயிர் முடிச்சைக் கண்டால்; விளையாட்டுக்காக ஒன்று தனக்கென்று இழுக்கவும் மற்றது தனக்கென்று இழுக்க ங் கண்டதுண்டு. அடைக்கலான் குருவியானது பூனையின் பற்களுக் அல்லது ஆந்தையின் சொண்டுகளுக்கு அஞ்சாமல் அவைகளின் த யிற் பறந்து விளையாடுகின்றது. எலியையும், சுண்டெலியையும் ப கிக்கும்படி பூனைக்குட்டி உண்டாக்கப்பட்டதென்று எண்ணாமல் அ வற்றுடனே சந்தோஷமாய் விளையாடுகின்றன. பூனை, பட்சிகள் எலிகள், வெள்ளைமுயல்களையும், சிறு வெள்ளை முயலளவு பருமனான சின்னப் பன்றிகளையும், பிடித்துத் தின்பது சுபாவம். பருந்து, ஆந்தை, பூனை என்பவைகள் பழகாததற்கு முன் ஒரு இடத்தில் அடைக்கப்பட்டால் அவை ஒன்றுடனே ஒன்று கொத்துப்பட்டுக் டித்து இவ்விதமான சண்டை உண்டாகும். முன் சொல்லிய மிரு ங்கள் அந்தக் கூட்டுக்குள் சகவாசமாய் இருப்பதைப் பார்ப்பத எவ்வளவு சந்தோஷம்.

இந்த மிருகங்களைச் சிறிதாயிருந்த வேளைகளிலே பிடித்து வள ர்த்ததினாலும், இவ்விதமாய்ப் பயிற்றப்பட்ட படியினாலுஞ் சந்தோ ஷமாய் இருக்கின்றன. இதுபோல நாமும் இளம்பிராயத்திற் கொ

Digitized by Google

ட பழக்கம் எதுவோ அதுவே நாம் வளர்ந்து மனுஷரான பொழுதும் நிற்கும். ஒரு பிள்ளை எப்பக்கத்திலும் திருப்பி வளைத்துவிடத்தக்க ஒருமரக்கொப்புக்குச் சரியாய் இருக்கும். ஆனாலும் மனுஷன் முற்றின பெரிய மரத்திற்குச் சரி. வெள்ளை மனுஷருக்குங் கறுத்தவர்களுக்கும் உண்டான வித்தியாசமான பழக்கம் உண்டு பட்டதெப்படியெனில், அந்தப் பிள்ளைகளை இளமையிற் பழக்கிக் கொண்ட மாதிரியினாற்றான் ஒரு இங்கிலிசுகாரனுடைய பிள்ளையை இளம்பிராயத்தில் எடுத்து ஒரு கறுத்தவனுடைய பிள்ளைகளுடனே வளர்த்தால் அப்பிள்ளை இவனுடைய பிள்ளைகளைப் போற்றானே வளர்ந்து அந்த பேச்சிலுஞ், செய்கையிலும், நடக்கையிலும், சரியொத்திருக்கும். இது போலக் குழந்தைகளைப் பிராமணரிலும் பறையரிலும் ஒவ்வொன்றாக எடுத்து ஒரு தருமசாலியானவர் வளர்த்து வித்தியாசம் இன்றி நடத்தி வந்தால் அவர்கள் இரண்டு பேரும் வித்தியாசம் இன்றி வேற்றுமை பாராதவர்களாய் வளர்வார்கள். நீ இன்ன குலத்தானென்று அவர்களுக்குச் சொன்னாலேயல்லாமல் அவன் பிராமணனென்றும் இவன் பறையன் என்றும் அறிந்து கொள்வதும் இல்லை.

அஞ்ஞானிகள் சொல்லியபடி பிராமணன் முதலான சாதியார் பிரமாவுடைய சிரசு, மார்பு, தொடை, கால் என்ற அவயவங்களில் இருந்து உண்டானார்களென்று வீணான கதையைக் கட்டிக்கொண்டு தங்கள் சாதியைக் காத்துக்கொள்ளும்படி மனுஷரை வஞ்சிக்கிறார்கள். கர்த்தர் மனுஷர் எல்லாரையும் ஒரேவித இரத்தத்தை உடையவர்களாகப் படைத்தார். (அப்போஸ. ௰௭. அதி ௨௬.) இதினால் எல்லா மனுஷரும் சுபாவத்தில் சரியென்று அறியலாம். இதினால் மனுஷருக்குள் உண்டான எந்த வித்தியாசமும் அவர்கள் சிறு வயதில் தங்கள் பெற்றோராற் போதிக்கப்பட்டபடிக்கே இருக்கின்றது. இது முந்தின சஞ்சிகையிற் காணப்படுவதாகிய கல்வியாலாய பலனென்ற சரித்திரத்தினால் அறியப்படுவது. எளிய குலத்திற் பிறந்தும் படிப்பு, விவேகம், முயற்சி என்றவைகளால் இங்கிலாந்தில் அதிகமேலான மனுஷரில் ஒருவனாக வந்தார் என்பது போல எங்கள் ஊரவர்களிலும் நடக்கும். ஆனாலும் இதற்குத் தடையாக நிற்பதே சாதி வித்தியாசம்.

பஞ்ச தந்திரக் கதை.

மித்திரபேத தந்திரம், ௮௩ம். பக்கத்தினின்று.

ஒரு காட்டிலே மதோற்கடனென்கிற ஒரு சிங்கம் நரியையும், புலியையுங், காக்கையையுந் தனக்கு மந்திரியாக வைத்துக்கொண்டு அரசாளுகிற நாளில் ஒரு நாள், அந்தக் காட்டில் ஒட்டகமொன்று வழி தப்பி வரக் கண்டு, மந்திரியாகிய காக்கை நீ ஆரென்று கேட்க, அந்த ஒட்டகம் நான் வழி தப்பி வந்துவிட்டேனென்று சொல்ல, அதை இட்டுக்கொண்டு போய்ச் சிங்கத்தினிடத்தில் விட்டு நடந்த காரியத்தைச் சொல்ல, அந்தச் சிங்கங் கேட்டுப் பயப்படாதே நம்முடைய மந்திரிகளுடன் நீயும் ஒரு மந்திரியாக இருவென்று அபயங்கொடுத்து, மந்தானகன் என்று பெயரிட்டு அதைத் தன்னிடத்திலே வைத்துக்கொண்டது. இப்படி வெகுகாலஞ் செல்லுகையில் ஒரு நாள், சிங்கத்துக்குச் சரீரம் அசக்தமாய் இருந்தபடியினால் அம்மூவரையும் அழைப்பித்து இன்றைக்கு என்னால இரை சம்பாதிக்கக் கூடாது. ஆகையால் நீங்கள் போய் எனக்கு ஏதாவது இரை கொண்டு வரவேண்டும். பிறகு நான் தின்று மிருந்ததை நீங்கள் தின்னலாமென, இம்மூன்றுஞ் சிங்கத்தின் கட்டளைப்படி அந்தக் காட்டிற் போய் இரை தேடிப் பார்த்து அகப்படாமையால், அப்போது தங்களோடு கூட இருந்த மந்தானகனைத் தூரத்திற் போம்படி ஒரு வேலையிட்டுக், காகம் மற்ற இருவரையும் பார்த்து இன்றைக்கு நாம் மந்தானகனைக் கொல்லுவோம். புல்லுந், தழையுந் தின்கிறவனால் நமக்குப் பிரயோசனம் என்னவென, மற்றிரண்டுஞ் சரிதான், ஆனாலும் அவனுக்கு நம்முடைய இராசா அபயங் கொடுத்திருக்கிறதினால அவனை நாம் எப்படிக் கொல்லலாம்? கூடாதென, காகம் ஆனாலும் நாம் இன்றைக்குச் சிங்கத்தின் கையாற் தப்பாமல் மரணமடைவோம். ஏனென்றால பசியெடுத்தால் தாயும் பிள்ளையை விட்டுவிடுகிறாள். பாம்பு தான் இட்ட முட்டைகளைக் குடிக்கிறது. ஆகையாற் பசியாற் பிடிக்கப்படுகிறவன் எந்தப் பாதகந்தான் பண்ணமாட்டான். இது உங்களுக்குத் தெரியவல்லையாவென்று சொல்லி, உடனே சிங்கத்தண்டை போய்க் காகஞ் சொல்லுகிறது, சுவாமி இன்றைக்கு ஏதுவுங் கிடைக்கவில்லையே என, ஆனாலும் இதற்கு என்ன உபாயம் பண்ணலாமெனச் சிங்கங் கேட்க, காகம் தங்கள் சுயாதீனத்தில இரை இருக்கையில் வேறே ஆலோசிப்பானேன். வெண்ணெய்யை வைத்துக்கொண்டு நெய்க்குத் தேடலாமாவெனச், சிங்கம் என்னிடத்து ஆகாரம் எங்கே இருக்கிறதென்க, காகம் மந்தானகனென்னும் ஒட்டை இருக்கின்றதேயென, இதைக் கேட்டுச் சிங்கம் பூமியைக் கையாற் தொட்டுச் சிவசிவாவெனக் காதின் மேற் கையை வைத்து நான் அவனுக்கு அபயங்கொடுத்திருக்கையில் நீங்கள் இப்படி விபரீதவார்த்தை சொல்லலாமா? அடைக்கலம் புகுந்தவர்களைக் கைவிடலாமா? பசு, பூமி, தானியம் இவற்றின் தானத்தைக் காட்டிலும் அபயந்தான் அதிகம். அசுவமேத புண்ணியத்தைக் காட்டிலும் இந்தப் புண்ணியம அதிகமென்று சாத்திரமும் இருக்கின்றதே எனக் கேட்டுக் காகம், ஐயா. என்னொரு விண்ணப்பத்தைக் கேட்டருளும். ஒரு குலத்துக்காக ஒருவனை விட்டுவிடலாம். ஒரு கிராமரக்ஷணைக்காக ஒரு குடும்பத்தைத் துறக்கலாம். ஒரு தேசபாலனத்தின் பொருட்டு ஒரு கிராமத்தைக் கைவிடலாம். தன்னிமித்தம் பூமியை விடலாம். ஆகையினால் இது தப்பன்று. ஆகிலும் அவனைத் தாங்கள் கொல்லவேண்டாம், நாங்களே கொல்லுவோம். இல்லாவிட்டால் அவனே சாக உடன்பட்டு என்னைக் கொல்லுங்கள் என்பான். அப்போது நாங்கள் கொல்லுவோமென்று காகஞ் சொல்லச் சிங்கஞ் சும்மா இருந்தது. பிறகு காகம், அதையே கட்டளையாக நினைத்துக்கொண்டு போய், மற்றிரண்டையும் இட்டுக்கொண்டு சிங்கத்தின் கிட்ட வந்து, சுவாமி இன்றைக்கு ஒன்றும் ஆகாரம் அகப்படவில்லை. அதினால் உங்களுக்கு இன்றைக்குப் பட்டினியிருக்கலாயிற்று. அப்படி இராமல் என்னைப் புசிக்கலாமென, நீ எவ்வளவு? உன்னை உண்டதினால் என் பசிதீருமா? உன் உடல் என் கடைவாய்ப் பல்லுக்குப் போதுமாவென்று கேட்க, நரி அப்படியானால் என்னைத் தின்னென்று நிற்க, நீயும் அப்படித்தான் நீ அதிகமல்லவென்று மறுக்கப், புலி இருவரிலும் நான் பருத்திருக்கிறதினால் என்னைப் பட்சித்துப் பசிதீருமெனச், சிங்கம் நீதான் எனக்கு எவ்வளவு இரை? உன்னைப் பெரிதாக நினைத்துக்கொண்டிருக்கிறாயாவென்று சொல்ல, ஒட்டகம் இதைப் பார்த்துச் சுவாமி, நான் எல்லாரைக் காட்டிலும் பெருத்திருக்கவில்லையா? சித்தமானால் என்னைக் கொல்லலாமென, இதைக் கேட்டவுடனே புலியும், நரியும் பாய்ந்து விழுந்து அந்தச் சணமே ஐயோ! அதைக் கொன்று எல்லாம் புசித்தன. ஆகையால் எங்கே மிகவுங் கீழ்கள் இருக்குமோ அங்கே சுகம் இராது. பிராணனுக்கு நாசம் வருமென்றே நினைக்கவேண்டும். இவ்விடத்திலும் அப்படியே இருக்கின்றது. ஆனாலும் கையில் அகப்பட்டுச் சும்மாய் இறக்கிறதைப் பார்க்கிலுஞ் சண்டை செய்வதே யோக்கியம். ஏனென்றால் சண்டைமுனையிற் செத்தாற் சூரர்களுக்குச் சாவும், பிழைப்புஞ் சமானமென்றது. அதைக் கேட்டுத் தமனகன் சொல்லுகிறது, பகைவர்களுடைய பராக்கிரமத்தை அறியாமல் எவன் பகைத்துக்கொள்ளுகிறானோ, அவன் சமுத்திரஞ் சிட்டுக்குருவியினால் எப்படி அவமானம் அடைந்ததோ, அப்படி அவமானம் அடைவானென, அப்போது தம்பி அதெப்படியென்று சஞ்சீவகன் கேட்கத் தமனகன் சொல்லுகின்றது. இன்னும் வரும்.

PANCHA-TANTRA-KATEI.

[A Translation &c.—Continued from page 83.]

In a certain forest there was a Lion whose name was Mathotcadan who, had three Ministers—a Jackal, a Tiger and a Crow.

One day while this Lion was exercising the duties of his Government, a Camel came wandering near the Court. A Crow, one of the Lion's Ministers asked the Camel who he was? The Camel said, he came as a wanderer, having lost his way. Upon this, the Crow introduced him to the Lion and related the circumstances of his case; whereupon the Lion said to the Camel "Fear not," and assured him of his protection and favor. He also made him a Minister and called him Mantanacan, and he continued in the Lion's service.

One day a long time after this, the Lion was indisposed, and called his three Ministers together and told them that he could not get food for himself that day, and therefore wished them to bring him food, adding that they should feed upon what was left from his table. The three Ministers, in obedience to the Lion roamed about the forest in search of prey but could find nothing. Then they artfully sent the Camel away upon a certain business, and when he had gone the Crow said to the other two Ministers, "Let us kill the Camel to-day. Of what use is the eater of grass and vegetables?"

They replied, "It is true such an one is of no use, but our Master having given him assurances of safety it is impossible for us to destroy him." To which the Crow replied, "Something must be done, or we shall certainly be killed to-day by the Lion; a mother when pressed with hunger will abandon her own offspring; a female serpent when distressed for food will devour her own eggs; what crimes will he not commit who is pinched with hunger? Know ye not this?"

The Crow then went to the Lion and said, "My Lord, We have not been able with our most diligent efforts to procure any food for your Majesty."

"Then, what must be done?" demanded the Lion.

Digitized by Google

The Crow replied, "When you have prey in your power, why look for it elsewhere? Why take the trouble to look for ghee when you have butter in hand?"

"What food have I with me?" asked the Lion.

"The Camel!" answered the Crow. The Lion on hearing this, touched the ground, and then his two ears, and exclaimed, "The gods preserve me! How can you propose such a thing as this, after I have given the Camel the assurance of my protection? Is it proper to expose to injury one who has taken refuge in our kindness? Neither the gift of a cow, nor the gift of lands, nor the gift of rice is to be compared with that which men call the greatest of all gifts, the assurance of friendship and protection: The merit of defending one is greater than that of the Aswa-medha sacrifice.

Hearing this the Crow said, "My Lord, I pray thee once more to hear me: A single individual may be given up to secure a whole family; A whole family may be destroyed to save a whole village; A village may be sacrificed for the safety of a whole country. A man may content himself with the destruction of the earth for his support. Therefore the proposal carries with it no sin. Thou shouldest not, however, take an active part in killing him. We will kill him or so contrive that he shall consent to offer his own body."

The Lion, upon this, made no answer.

The Crow taking advantage of his Majesty's silence, went some way off and returned with the others to the Lion. As he approached him, he said, "My Lord, we could find no food to-day; Thou art therefore reduced to hunger. Let your Majesty satisfy his hunger with my poor body."

"How big art thou," said the Lion, "poor little thing! Can you serve for my hunger? Is your body sufficient to employ my grinders?"

Upon this, the Jackal offered himself, and the Lion made the same answer to him. Then interrupted the Tiger, "I am larger than these two. Therefore O Master, live by my body."

The Lion said, "How insufficient art even thou for me? Dost thou think thyself very large?"

Upon this the Camel broke out and said, "My Lord, am I not larger than these three? Kill me, if thou please." He had no sooner said this, than the Tiger and the Jackal fell upon him and alas! they killed him and ate him up.

Therefore said Sanjevakan, where there are wicked persons, there is no safety. We have reason to fear for our lives. Such is the nature of this case Therefore it is better to withstand an enemy and fight with him manfully than to suffer ourselves to be taken and murdered without defence; for it is equally righteous to die in self-defence or to save one's life by valor.

[To be continued]

[A Jewish story.]

மிகுதியும் பேர்பெற்ற உபதேசியாகிய இரபிமீயா என்ற ஒரு பூதன் தன் வாடிக்கைப்படி ஒரு ஓய்வுநாளில் கோயிலுக்குப் போய் அவ்விடத்தில் அன்று பகல் முற்றுஞ் சனங்களுக்கு உபதேசித்துக் கொண்டிருந்தார். அவர் அப்படிப் போயிருந்த வேளையில் அவருடைய மக்கள் இருபேர் மரித்துப்போயும், அவர் சாயங்காலவேளையிற்றானே வீட்டுக்கு வந்தார். அப்பொழுது அவருடைய மனைவி அவருக்குப் பாத்திரத்தை நீட்ட, அவர் வாங்கிக் குடித்து ஓய்வுநாள் கழிந்துபோய்விடுவதால் கர்த்தருக்குத் துதிசெலுத்திப் பின்பு என் குமாரர் எங்கே, அவர்களை நான் ஆசீர்வதிக்கவேண்டும், அவர்களைப் பள்ளிக்கூடத்திலுங் காணவில்லை. என் மக்கள் எங்கே? நான் அவர்களை ஆசீர்வதிக்கவேண்டுமேயென, அவர் மனைவி, அவர்கள் தூரத்திற்போகவில்லை, இங்ஙனே நிற்பார்களாக்குமென்றுசொல்லி, உடனே அவருக்குப் போசனங் கொடுக்க, அவர் சாப்பிட்டுச் செபஞ்சொன்னபிறகு, அந்த பூத ஸ்திரி புருஷனைப் பார்த்து இரபி, நான் ஒரு கேள்வி கேட்க இருக்கின்றதென, கேள், அன்பான மனைவியேயென்று புருஷன் சொல்ல, மனைவி சிலநாட்களுக்கு முன்னே ஒருவன் என்னிடத்துக்கு வந்து என்கையிற் கொஞ்சப் பொன்னகையை இல்லடைக்கலம்வைத்துப்போய் பின்பு வந்து கேட்கிறான். கொடுக்கலாமோவென்று கேட்க, புருஷன் இது நீ என்னைக் கேட்கவேண்டிய கேள்வியல்ல, அவனவன் பொருளை அவனவனுக்குக்கொடாமல் பின்போடலாமோ? கொடுக்க மனதில்லாதிருக்கலாமோவென மனைவி அல்லவே நான் உம்மை விசாரித்துக்கொண்டு செய்யநினைத்தேன் என்றுசொல்லி, உடனே அந்தச் சவங்களைக் கிடத்தியிருக்கிற அறைக்குள் அவரை அழைத்துப்போய் முகத்திட்டுச் சீலையை எடுக்க, அவர் ஆ! என் மக்களே, பிள்ளைகளே, என் கண்மணியே, என் அறிவின் ஒளியே, ஏன் என்னைவிட்டுப் போய்விட்டீர்களோ? நான் உங்களுக்குப் பிதாவாயிருந்தேன். நீங்கள் எனக்கு நியாயப்பிரமாணம் படிப்பித்த உபாத்திமாரானீர்கள். ஐயோ மரித்துவிட்டீர்களோ என்று மிகுந்த சத்தத்துடனே புலம்பி அழுகிறதை மாதாக்கேட்டு, அப்பாற்போய் மிகுதியுஞ் சகித்து, அழுதுகொண்டு திரும்பி வந்து புருஷனுடைய கையைப் பிடித்து, இல்லடைக்கலம் வைத்த பொருளைப் பற்றி நீர் எனக்குச் சொன்னதுபோல இந்தப் பிள்ளைகளைக் கர்த்தர் தந்தார், கர்த்தர் எடுத்துக்கொண்டார் கர்த்தருடைய நாமத்துக்குத் துதி உண்டாவதாகவென்று சொல்லப் புருஷனும், மனைவியும், இருவரும் கர்த்தரைத் துதித்தார்கள். மிகுதியும் விலைபெற்ற முத்து இரத்தினமுதலானவைகளை வைத்திருப்பதைப்பார்க்கிலும், தேவபத்தியுள்ள மனைவியையுடையவனே அதிக பாக்கியன் என்று அறிக.

புலம்புவோருக்குச் சொல்லியபுத்தி.

[Advice to Mourners.]

தன் சகோதரன் மரித்தடக்கம்பண்ணப்பட்ட கோரிக்குக்கிட்டநின்று அழுது சஞ்சலப்பட்டு இடைக்கிடையே அன்றுத்துபார்த்து என்தம்பியெடா! என்தம்பியெடா! என்று புலம்புகிற ஒருவனை அப்போக்கனுள ஒரு ஞானிகண்டு நீ ஆருக்காகத் துக்கித்துக்கொண்டு நிற்கிறுயென அவன் மறுமொழியாக, சுகத்தோடிருந்தகாலத்தில் அதிகம் நேசியாதவனும், மரித்த பிறகு எனக்கு அதிக இக்கட்டை வருத்துவித்தவனுமாகிய என் சகோதரனுக்காகவே புலம்புகிறேன் என்ன அவர்கேட்டு உன்சகோதரன் இப்போது உயிரோடெழுந்தால் அவனுக்கு உன்னுலாவதென்னவென்றுகேட்க, அவன் ஒருபொழுதும் பேச்சிலென்றாலும் அவனை விதனப்படுத்தாமல் அவன் இஷ்டத்தை நாடி நடப்பேனென்க ஞானிகேட்டு, விருதாவாய் நீ துக்கியாதே, உனக்குச் சிநேகிதர் இருந்தால் அவர்களும் இப்படியாகவே போய்விடுவார்கள் என்று எண்ணி அவர்களுடனே அன்பு கொண்டு நடவென்று போதித்தான்.

இந்துதேச இங்கிலிஸ இராச்சிய விருத்தி.

[Rapid growth of British power in India.]

கல்குத்தாபட்டினத்தில்லோட் கிளாய்வு (Lord Clive) என்ற இங்கிலிச இராணுவத் தளகர்த்தன் அ௨ ௬ ௩ க்கு முன் ஒரு சின்னக்கோட்டை அத்திவாரம்போட்டார். இதுவே இந்தியதேசத்தில் இங்கிலீசுகாரர் கட்டின முதற்கோட்டை. பின்புவரவர ஒன்றின் பின் ஒன்றூர்களைப்பிடித்து, இந்து நதிக்கு (Indus river) கிழக்கான தேசங்களையும் ஆற்றிற்கிப்பால் மகமது இராச்சியத்தாருடைய தலைப்பட்டணத்தையுங் கட்டிக்கொண்டார்கள். கொஞ்சக்காலத்துக்குள் இவ்வளவு சீக்கிரமான வளர்த்தி மற்றெந்த இராச்சியங்களிலும் உண்டானதாக நாங்கள் சரித்திரங்களிலே வாசித்து அறியவில்லை. ஆகையால இந்துதேசத்தின் பலவித சனங்களும் நன்மையை அடையும்படி கர்த்தா கிருபைசெய்தாரென்றெண்ணி நன்றி அறிந்திருக்கவேண்டும். இப்படியே அவ்வூரவர்கள் தங்கள் ஊர்ப்பிறந்த இராசாவுக்குக் கீழாய் இருக்கையில் யுருத்தவிதத்தைப்பார்க்கிலும் இப்போது அவர்களுக்கு நல்ல இராசாவும் நல்ல போதிப்பும் உண்டுபடுவதால அது அவர்களுக்குப்பெரிய ஆசீர்வாதமாயிருக்கும். இத்தால் கிறிஸ்தவர்கள் பராபரன் தமது சுவிசேஷத்தைச் சகலசாதியாருக்கும் அறிவித்துத் தமது தேவ வாக்கினுற்சொல்லுவித்த வசனங்களை நிறைவேற்றுவார் என்றறியவேண்டியது. பொய் மதங்களை நம்பி அவற்றிற்கு அடிமைகளாயிருந்தவர்கள் பாரபரனுடைய வசனமென்ற நீரூற்றில் குடித்தால், கர்த்தர் தங்களுக்குச் செய்த கிருபைக்காக அவரைத் துதிப்பார்கள்.

புகைக் கப்பல்.

[Account of the Atlantic Steam ship President.]

இர்மையைச் சேர்ந்த லிவர் பூல் என்ற (Liverpool) இடத்தில் இருந்து அத்திலாந்திக்குச் சமுத்திர வழியாய் அமரிக்காவின் நியுயோர்க்கு (New York) என்ற பட்டணத்துக்குப் புகைக்கப்பல்போக்குவரவுபண்ணி இப்போது ஏறக்குறைய மூன்று வருஷமாகின்றது. இந்தப் புகைக் கப்பல்கள் மிகவும் பெரிய அளவும், கதியாய் ஓடுகின்றவையாயும் இருக்கின்றன. ஒரு மணித்தியாலத்திற் பத்து மயில் தூரத்துக்கு அப்பாலும் ஓடும். இவைகள் எவ்வளவு பெரிதென்றில் அவை ஒன்றின் நீளம் ௱௭௮. முழமும், அகலம் ௪௫. முழமும், தாழ்வு ௨௯. முழமும், பாரம் ௨௲. தொன் (Ton) என்றதாகவும், அதின் பெலனைப் பற்றிக் கேட்கில், அது இருநூற்றைம்பது குதிரைகளின் பெலனனவென்றும், தண்ணீரின் மேல் ஓடுகின்ற அதின் சில்லுக்களின் சுற்றளவு ௬௰. முழமென்றுஞ் சொல்லப்படுகின்றது.

Printed and published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor,—Edited by Henry Martyn and Seth Payson.

Digitized by Google

SUPPLEMENT TO THE
உதயதாரகை.—MORNING STAR.

சஞ்சிகை. ய.] ௲அளசக (௵). வைகாசி உய, திகதி. வியாழக்கிழமை. Thursday, May 20, 1841. [No. 10.

STATISTICS OF THE COLLECTORATE OF MADURA.

மதுரை.

சென்னபட்டணங் கோவறம்மேந்துக்குட்பட்ட பூமிகளில் கலக்கட்டர் விசாரணைக்குட்பட்டிருக்கிற விஸ்தாரமான மதுரை, திண்டிக்கல்லென்னும் இவ்விரண்டு துக்குடிகளில் இராமநாதபுரம், சிவகங்கை, கண்டமநாயக்கனூர், அம்மையநாயக்கனூர் என்னு நான்கு பெரிய செமிந்தாரிகளும், பின்னும் அநேக சிறு செமிந்தாரிகளுமிருக்கின்றன. சின்ன செமிந்தாரிகளிற் சில பாளயப்பட்டார் வசத்திலுஞ், சில அவற்றின் உரிமையாளருடைய அநுமதிப்படி கும்பினியாருடைய விசாரணைக்குட்பட்டுமிருக்கின்றன. கும்பினி நிலங்கள் எட்டுத் தாலுகாவாகப் பிரிபட்டு ஒவ்வொன்றிற்கொரு தாசில்தாரும், முசுமதாரும் முதன்மையாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மேற்சொல்லிய தாசில்தார், முசுமதார் என்பவர்களின் நாமங்களுந் தாலுகாக்களுமாவன.

க. மாடக்குளம்;	தாசில்தார்.	அண்ணாச்சிராவு.
" "	முசுமதார்.	தோண்டுராவு.
உ. திருமங்கலம்;	தாசில்தார்.	சீவனராவு.
" "	முசுமதார்.	இலட்சுமணராவு.
ங. மேலூர்;	தாசிலதார்.	அண்ணாச்சிராவு.
" "	முசுமதார்.	சகநாதராவு. [ரைப்பட்டி
ச. மருங்காபுரி;	தாசிலதார்.	அப்புராவு (இருக்குமிடங் கா
" "	முசுமதார்.	கிருஷ்ணராவு.
ரு. தென்கரை	தாசிலதார்.	வெங்கிட்டராமனய்யன் (இருக்குமிடம் பெரியகுளம்.)
" "	முசுமதார்.	நரசிங்கராவு.
சா. நிலக்கோட்டை;	தாசில்தார்.	வெங்கிட்டராவு.
" "	முசுமதார்.	அரிராவு. [மிடம் பழனி)
எ. ஐயம்புள்ளி	தாசிலதார்.	ஆண்டியப்பபிள்ளை (இருக்கு
" "	முசுமதார்.	ராமராவு. [டிக்கல்.)
அ. தாடிக்கொம்பு	தாசில்தார்.	சாமராவு(இருக்குமிடந் திண்
" "	முசுமதார்.	திருமலையராவு.

இராமநாதபுரம் சேமிந்தாரி.

இராமநாதபுரஞ் சீமையிற் செங்கோன்முறைக்கும், இராச்சியபரிபாலனத்துக்கும் உரியவனும், போதிய வயதில்லாதவனுமாகிய துரைச்சாமி நாச்சியாருக்காக மேற்படி அவனுடைய பெரிய தகப்பனாராகிய நீ. நீ, முத்துச்செல்லத்தேவரும் மேற்படி பெண்ணுடைய தாயாரான ராணி பருவதநாச்சியாரும், காரியகாரராயிருந்து இராச்சியத்தை ஆண்டுகொண்டு வருகிறார்கள். ஆனாலும் மேற்சொல்லிய பட்டத்துக்குரிய வாலைப்பெண்ணுக்குத் தத்துப்பாட்டியாரும், மாசி செமிந்தாரிக்குச் சிறியதாயாரும், முன்னிறந்துபோன சேதுபதிக்கு முன்னிறந்துபோனவருடைய பெண்சாதியுமான ராணி முத்துவீராயி நாச்சியார் மேற்படி செமிந்தாரியைக்குறித்துப்பிரவிஞ்சியாற் கோட்டில் வியாச்சியம் பண்ணியிருக்கிறாள். அன்றியும் முத்துவீராயி நாச்சியார் மிகுந்த யோக்கியவதியுங், கல்வி கற்றவளுமாயிருக்கிறாள். ஆனாலும் அவள் சகோதரன் நீ. நீ. முத்துச்செல்லத் தேவரிடத்திலும, இராமநாதபுரஞ் செமிந்தாரிக்குப் பூருவ முதன்மையான பேஸ்காரர் உத்தியோகத்தில் இருந்து மறுபடி மேற்சொல்லிய காரியகாரனுடனே விரோதமாயிருந்ததினால் யோக்கியனல்லவென்று தள்ளப்பட்டிருக்கிற சாமாவய்யனென்கிற பிராமணன் மேற்படி ராணியுடைய உதவிமுதலான சிலவுகளினாலே தனக்குஞ் சேதுபதிக்குமிருந்த பகையைத் தீர்த்து செமிந்தாரியையுங் கைவசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று எத்தனப்பட்டிருக்கிறானென்று யோசிக்கும்படியாயிருக்கிற மேற்படி சாமாவய்யனுடைய துற்போதனைக்குட்பட்டு அதிகஞ் செலவுள்ள வழக்குக்கு மேற்படி செமிந்தாரியை உட்படுத்தி இருக்கிறாளென்று காண நாங்கள் விசனத்தை அடைகிறோம்.

இராமநாதபுரங் கோவறன்மேந்து நிலங்களைப்பார்க்கிலுஞ் சொற்ப நிலங்களை அடக்கியிருப்பதால் இச்செமிந்தாரியைச் சேர்ந்த தாலுகாக்களில்த் தானியங்களாகத் திறைகொடுக்கப்படுகின்றது. ஆனாலும் ஒவ்வொரு தாலுகாவுக்கு ஒவ்வொரு அமீனாவுஞ் சம்பிரிதியுமாக நியமிக்கப்பட்டிருந்த பொழுதிலுந் தாசில்தார், முசுமதார்களுக்குள்ள உத்தியோகமுஞ் சங்கையும அவர்களுக்குஞ் சரியாகவே யிருக்கின்றன. இச்செமிந்தாரியில் (யச)தாலுகாவிருக்கின்றது.

அமீனா, சம்பிரிதிகளுடைய நாமங்களுந் தாலுகாக்களுமாவன.

க. முதுகுளத்தூர்;	அமீனா.	கேசவய்யன்.
" "	சம்பிரிதி.	வெங்கிடாசலநாயக்கன்.
உ. சிக்கல்;	அமீனா.	வெங்கிடாசலமய்யன்.
" "	சம்பிரிதி.	சோமசுந்தரம்பிள்ளை.
ங. இராமநாதபுரம்; கசுப்பா	அமீனா.	* [ளை.
	சம்பிரிதி.	முத்துக்குமாரசுவாமியாபிள்
ச. பாப்பான்குளம்;	அமீனா.	கிருஷ்ணமநாயக்கன்.
" "	சம்பிரிதி.	வாலகிருஷ்ணமநாயக்கன்.
ரு. அபிராமம்;	அமீனா.	முத்தண்ணாவய்யன்.
" "	சம்பிரிதி.	மீனாச்சிசுந்தரம்பிள்ளை.
சா. பள்ளிமடந்திருச்சுளிகை	அமீனா	வெங்கிடசாமிநாயக்கன்.
" "	சம்பிரிதி.	சொக்கலிங்கம்பிள்ளை.
எ. காமன்கோட்டை;	அமீனா.	காந்தவராயபிள்ளை.
" "	சம்பிரிதி.	தனுக்கோடியாபிள்ளை.
அ. இராசிமங்கலம்;	அமீனா.	முத்துவீரப்பபிள்ளை.
" "	சம்பிரிதி.	அப்பாவய்யன்.
கூ. கமுதி;	அமீனா.	இராமசாமிஅய்யன்.
" "	சம்பிரிதி.	முத்துக்குமாரசாமியாபிள்ளை
ய. அறுநாற்றுமங்கலம்;	அமீனா.	மகாதேவய்யன்.
" "	சம்பிரிதி.	உக்கிரபாண்டியபிள்ளை.
யக. அநுமந்தன்குடி;	அமீனா.	சுப்பராயவய்யன்.
" "	சம்பிரிதி.	சின்னத்தம்பியாபிள்ளை.
யஉ. ஒரூர்;	அமீனா.	வெங்கிடபதிஅய்யன்.
" "	சமபிரிதி.	சேஷயஅய்யங்கார்.
யங. குத்தகைநாடு;	அமீனா.	இராமநாதபிள்ளை.
" "	சம்பிரிதி.	முத்துவய்யன்.
யச. சாலைக்கிராமம்?	அமீனா	முத்துராமலிங்கம்பிள்ளை.
" "	சம்பிரிதி.	சிவசுப்பிரமணியபிள்ளை.

[சிவகங்கை செமிந்தாரியைப் பற்றிப் பின்னுஞ் சொல்லப்படும்.]

STATISTICS OF THE COLLECTORATE OF MADURA.

The Collectorate of Madura, the most extensive under the Presidency of Fort St. George, known as the districts of Madura and Dindigul, comprises the four large Zemindaries of Ramnad, Shevagunga, Guntamanaikanoor and Ammianaikanoor; besides a great many smaller ones, some of which are in the hands of the Polligars, and some under the management of the East India Company, at the express wish of the proprietors. The Government lands are divided into 8 Talooks, at the head of each of which is a Tasildar with a Moosomdar

The names of Tasildars and Moosomdars with their Talooks are,

1. Madacolum;	Tasildar	Aanajee Rao.
" "	Moosoomdar	Dhond Rao.
2. Thiroomungalum;	Tasildar	Geevana Rao.
" "	Moosoomdar	Luckshumun Rao.
3. Meyloor;	Tasildar	Annajee Rao.
" "	Moosoomdar	Juggernauth Rao.
4. Maroongapoory;	Tasildar	Appoo Rao.
" "	Moosoomdar	Khrishna Rao.
5. Tenkurrai;	Tasildar	Vengataramanayen
" "	Moosoomdar	Narasinga Rao.
6. Nellacottay;	Tasildar	Venkata Rao.
" "	Moosoomdar	Hurri Rao.

Digitized by Google

7.	Iyempully;	Tasildar	Andiappapilly
	" "	Moosoomdar	Ram Rao.
8.	Taudicomboo;	Tasildar	Shama Rao.
	" "	Moosoomdar	Tirumalia Rao.

Ramnad Zemindary.

The Ramnad Zemindary is administered by Ry. Ry. Mootoochilla Thavur, under the title of Manager, in conjunction with the Rance Parwuthy Natchiyar, for their niece and daughter Toory-sawmy Natchiyar the minor heiress, but a claim has been set up for the estate in the Provincial Court, by the Ranee Mootoo Verayee Natchiyar, aunt and grandmother by adoption of the minor heiress, and herself the widow of the last Sathoopathy but one. She is a lady of high respectability and attainments, and it is with sorrow we observe she has involved the estate in an expensive litigation, under the excitement of the brahmin Sawmavayen, formerly chief Peshkar of Ramnad under the lady and her brother Mootoochella Thavur, who he thinks, has not adequately regarded him, and is now supposed to be endeavoring to revenge himself by the aid and at the expense of the Dowager Ranee and the true interests of the Zemindary.

As the revenues are collected in kind, the Talooks are much smaller in dimension than in the Government lands, and are administered each by an Ameen, and Samprethy whose duties correspond with those of Tasildar and Moosoomdar.

The Talooks are 14 in number.

The names of Ameen and Samprethy with their respective Talooks are,

1.	Moodoocullatoor;	Ameen	Rasaviyan
	" "	Samprethy	Vencadachela naick.
2.	Sikkle;	Ameen	Venkatasalem Iyen
	" "	Samprethy	Somasoondrumpilly.
3.	Ramanad Cusbah;	Ameen	Vacant
	" "	Samprethy	Mootoocomaraswamypilly
4.	Papancoolum;	Ameen	Krishnama naik
	" "	Samprethy	Balakrishnama naik
5.	Abeeramum;	Ameen	Mootannahvyan
	" "	Samprethy	Menatchy Soondrumpilly
6.	Pallymadam } Trichuligay };	Ameen	Vengataswamy naick
	" "	Samprethy	Sokalingam pilly
7.	Camencottay;	Ameen	Kattavarava pilly
	" "	Samprethy	Tanookodia pilly
8.	Rasimungalum;	Ameen	Mootooverappa pilly
	" "	Samprethy	Appoovyan
9.	Camoothy	Ameen	Ramaswamy Iyen
	" "	Samprethy	Mootocoomaraswamy pilly
10.	Arnootmungalum;	Ameen	Mahadaviyan
	" "	Samprethy	Ookra-pandia pilly
11.	Anumuntan-coody;	Ameen	Soobaraya Iyen
	" "	Samprethy	Chinnatambia pilly
12.	Oroor;	Ameen	Vencatapathy Iyen
	" "	Samprethy	Shashia Iyengar
13.	Kúttagy-nadoo;	Ameen	Ramanadapilly
	" "	Samprethy	Mootoovyan
14.	Salagramum;	Ameen	Mootooramalingam pilly
	" "	Samprethy	Siva Soobramanyia pilly

[The account of Shevagunga will be given in our next number.]

[Answer to a Correspondent on Nydertham.]

கனம்பொருந்திய முகாமைக்காரரே,

நல்லூர் மாணுக்கன் நைடதவுரையை நன்குணராது குற்றமென்று
சொன்னவற்றிற்கு இலக்கணவிலக்கியங்களாற் கண்டனையும் அவ
னுரையிலிருக்கின்ற குற்றங்களையும் எடுத்துக்காட்டுகிறேன். மதிற்
சூழ்கடிகொண்மாககரென்றிருக்கலாகாதென்றான்: கம்பனுவில்,உ
ன்மதிற்சனகையென்றதும்; பிரபுலிங்கலீலையுள்,மதில்சூழ்கடக்
ல்லகழி என்றதும் அவன் ஓரான்போலும். அது இயல்புந் திரி
றும்.—கிழல்கதுவிடாதென்பது வேற்றுமைத்தொகையல்ல, அ
டியாளுல் கிழற்கதுவிடாதென்றிருக்கவேண்டுமென்றவிடை
கவளம்வேற்றுமையென்னுஞ் சூத்திரமெழுதினான். சிலப்பதிகார
ஞ்,பாம்புகயிருக்கடல்கடைந்தமாமாயன் என்றதும், சிந்தாமணி
வாட்டிறல்குருசில் என்றதும்,குறளில்,பொருள்கொடுத்து என்ற
நாலடியுள், வழங்கான்பொருள்காத்திருப்பானேல் என்றதும்,
னுவில் வேறுநூல்செய்துமெனும் என்றதும், நூல்பயிலியல்பு என்
தும், இரண்டாம்வேற்றுமைத்தொகையே. இவற்றிற்குச் சூத்தி
நன்னூலில் இயல்பின்விகாரமும்விகாரத்தியல்புமுயர்திணைபிட்டு
ந்துக்தொக்கும் விரவுப்பெயரி . விரிந்துகின்ற மன்னபிறவுமாகு
ருபே,என்றிருக்கின்றது. இவ்விலக்கணவிலக்கியங்களை அவன் உ
ன்போலும்.—வருவித்தருத்தம்பண்ணலெனிதென்றான், அவனிலம்
ருத்தாகருமங்கிரியைபிரேச்சன் கருத்துப்பதம்பொருள் காரண
தொகை யணியினம்விசேட மதமுத்திமுதலிய வருவித்துரைப்
ய்யுள்வாயுரைக்கே, என்றவிதியும், பரிமேலழகர், பிறவிப்பெருங்
லென்னுங் குறளில்,சேர்ந்தாரென்றது சொல்லெச்சமென வருவி
தும், நன்னூல் விருத்தியுளாங்காங்கு பொருளமைதிக்கேற்ப வரு
தலையும் மறந்து மறைந்தான் போலும்.—போலெனப் பிரித்தல
டாதென்றான். நன்னூற் காண்டிகையுரையுள், கனக்கோட்டந்
தாலஃதேபோன்மாந்தர் என்றசெய்யுட்கண் போலெனப் பிரித்
க்கின்றதும், கடவாமடிசி என்னுஞ் சூத்திரமுடிவில், போல் போ
ம் மால் மாறும் என்றிருக்கின்றதும், கொள்வாருங்களவருநேர் நி
கேர்-கேர்வரென்றனதும்,அறநெறிச்சாரத்தில் வைகலுமென்றவ
பாவில் அஃதேபோலென்றது முற்றுப்பொருளானதும், செவ
போர்க்கதக்கண்ணன் என்ற செய்யுட்கண் மதியம்போன் மல்
ங்கென்றதன் உரையில் போல்-போலுமென முற்றுப்பொருள்
செய்ததும் எண்ணிலான்போலும். மகரக் குறுக்கத்துக்குமீரொ
டணிலைக்குஞ் சொன்னவை இங்ஙனமேலாது.—சூழ் என்பதிறந்த
லவினைத்தொகையல்லவென்றெனக்குரைத்தான்: அகத்தியம்
மும்வினையுந் தோன்றிப்பாறேன்றது பெயர்கொள்ளுமதுபெய
சம்மே என்றதும், காலங்காட்டாப் பெயரெஞ்சலவினைத்தொ
என்றதும் ஒருபொருடருமென்றவனோர்ந்திலான. இலக்கணத்தி
டில் செய்தவென்னெச்சமுஞ் செய்யாவென்னெச்சமுஞ் செய்
த்திரியுஞ் செய்யுள்வழக்கினும். உதாரணம் புகழ்புரிந்தில்லிலோ
ன்றதும், இராமாயணம் அதிகாயன்வதைப்படலத்தில் என்
டைநலகவிறைஞ்சியெழாவென்றதும் மறந்தான்போலும். வழக்
மென்றவும்மையால் உரையினும் வருமென்பதாம். பஞ்சதந்திர
தையினும், பலவிலககணவுரையினும் பயின்றுவருதலறியக்கட
தன கருத்துக்கேசரியான - டி சாற்றினான், மேலவை அறியான்
லும். பயனிலையிருந்தும பாராமல் இல்லையென்றது பகுத்தறிவி
மையல்லவோ? இப்பால்

நல்லூர் மாணுக்கன் நைடதவுரையின் குற்றங்கள்.

கவது. காவவில்லாவரணங் கைக்கொள்வாரோன்னவர்கள் என
புறப்பொருளிலக்கணத்தால் சிறப்பென்றவுரை செல்லாது. உவ
மகத்துவமென்றது செய்யுளிவில்லை. இது மிகைபடக்கூறலென்னுங்
ற்றம். உவது. உடைய முன் ஆனவினைவருதல் கூடாது. இது வினை
வடுக்கு. ௩வது. சங்கினங்களிற்றுளைந்திலறவென்றலொவ்வாது. இ
றென்றதுஞ் செய்யுளிவில்லை. இதுவுமிகைபடக்கூறலென்னுங்குற்ற
ருவது. கொழிக்குமென்றதற்குப் பயன்கூறவில்லை, அது குன்றக்கூ
லென்னுங்குற்றம். ருவது. அகழ்க்கிடங்கென்றது கூறியது கூறலெ
ன்னுங்குற்றம். எவது. கிழல்கதுவிடாதென்பதை யெழுவாயாக
சொன்னது கின்றபயனின்மையென்னுங்குற்றம். அவது. அக்கி
ல்கதுவிடாதென்றதற்குப் பதவுரையில் அக்கிழலானதென்றெழுவா
யாகச்சொல்லிப் பின்பு தாற்பரியவுரையில் அந்கிழலைச்சூழ்ந்திரு
கீரைப்போலவும் என்று வேற்றுமையாகச்சொன்னான். இது மா
கொளக்கூறலென்னுங்குற்றம். கூவது. என்னுரையில கிழல்கதுவிடா
தென்றது வேற்றுமையல்லவென்றுமறுத்துத் தன் தாற்பரியவுரை
ல் வேற்றுமையாகச்சொன்னது நுண்ணுணர்வின்மையென்னுங்கு
றம். இவ்வகைக்குற்றங்கள் நீங்கலாக மற்றவையெல்லாமென்
ரையைத் தானெழுதினனென்றவன்போலு மாணுக்கர்களுக்கே தெ
வாகத் தெரியும். இப்படிக்கு, தமிழ்ப்புலவர்
வேதகிரிமுதலியார்.

Digitized by Google

MESSRS EDITORS,

Considerable difficulty has been found in identifying Tamil words, that have been rendered into English on account of the dissimilarity between them and the English, both to the eye and the ear. To obviate the difficulty, the following scale has been prepared, and is proposed for consideration to those who are engaged in the Tamil work.—A leading object is to facilitate the work of *translating* Tamil sciences, to establish an *etymology* in English characters which may be every where understood, may be given wherever there is a Press, and a common font of English type, and which shall be such as to render a reference to the original easy and indubitable as to the particular words transferred.

H.

Scale of corresponding letters for the transfer of Tamil words to English.

அ	a short	ஞ	gn
ஆ	â long	ட	d
இ	i short	ண, ந & ன	n (the d or t following will indicate the particular n in most cases.)
ஈ	ee		
உ	u short		
ஊ	ū long		
எ	e short	த	t or th, acc. to sound.
ஏ	ē long	ப	p (b in words where the etymology is established.)
ஒ	o short		
ஓ	ō long	ம	m
ஐ	ei	ய	y
க	k	ர & ற	r. If ற follow ன் or ண், d.
ங	ng	ல, ள & ழ	l
ச	s or j acc. to sound	வ	v

Where any particular etymology is established by *uniform use*, it should be followed, except it be very objectionable.

Advantages of this Scale.

1. It is simple and easy of application.
2. It secures definite corresponding letters, to meet every case, with the exception of the *n*, *l* & *r*.
3. It will greatly facilitate the work of *transfer* and of *comparison*, in the two languages.
4. It will secure a *correct representation of sound* to as great an extent (and I think *greater*) as can be done by *any general rule of transfer.*

முகாமைக்காரரே,

உங்கள் உதயதாரகைப்பத்திரம் கூம். சஞ்சிகை அளம் புறத்தில் இவவருடத்து இராசாச் செவ்வாயோ புதனோவெனவினவின ஆறுமுகம தாமோதரருக்குப் பிரத்தியுத்தாரமாவது,

முதல வருடத்திற் பங்குனிமாதவளர்பக்கத்துப் பிரதமை சூரியோதயத்தில் வந்த வாராதிபன் இராசாவென்றும் அந்தஇராசாவினாலே மழை மரக்கால் ஆதாயஞ் செலவு நிதானிப்பதென்றுஞ் சொலவியிருக்கும விதிமுறை பிறழாது. அநேகவருடக்காலங்களாய் யாழ்ப்பாணத்துச் சாத்திரிமார் நிச்சயித்துத் தங்கள் பஞ்சாங்கம் திரியாங்கங்களில் எழுதிவருவது போலவே சார்வரி வருடத்துப் பங்குனிமாதவளர்பக்கத்துப்பிரதமை செவ்வாயக்கிழமை உதயாதி, ந.நாழிகையிற் கூடி மற்றநாட் புதன்கிழமை ச நாழிகை அளவில் அற்றுப் போனதினாலும் செவ்வாய்க்கிழமை பிரதமை சூரியோதயத்திவில்லாமற் புதன்கிழமை சூரியோதயத்தில நின்றதினாலும்செவ்வாயலலப் புதனே இவ்வருடத்தராசாவென இவ்வூர்த்திரியாங்கங்களிலுரைத்திருப்பது நிதானமென அறியலாம. இப்படிக்கு

தி௲௮ளசக௲ வைகாசிமீ யஎதி. ஓர்மாணாக்கன்.

[Communicated for the Morning Star.]

Robbery—We are sorry to learn that the Elia Rajah of Travancore has been robbed of two gold chains. We give a description of the rogue that has absconded with them in hope, that if met with, his seizure may be effected by notice given to the nearest police officer or the head of the village.

His name is Kishnan; native place Cochin; Country Naloodesam; village Nellypallymooni; house Variauttooveedoo; age from 22 to 30 years; Colour brown as deer; Caste Soodra; appearances of the person are, a long face; some hairs grown on one side of the jaw; middle-sized; large holes in both ears but no ear-rings; a mark in the forehead, &c.

23d April, 1841. (Signed) Sooba Ras Devan.
(Signed) W. Colin, Esq.

திருவாழுங் காட்டின் இளையராசா அவர்களுடைய இரண்டு தங்கநாழிகை வட்டச் சங்கிலிகள் களவுபோனதல நமக்கு மெத்த விசனமாயிருக்கின்றது. மேற்படி சங்கிலிகளைத் திருடிக்கொண்டு ஓடிப்போய் ஒளித்துக்கொண்டிருக்கிற திருடனுடைய அங்க அடையாளங்களை இதிலே தெளிவாய் எழுதிக்காட்டுகிறோம். அவன் அவ்விடங்களில் வந்திருந்தால கண்டு பிடித்தனுப்பும்படி சமீபமான போலிசுக்குக் கட்டளைச்சட்டம் அனுப்பிவித்துத் திட்டம்பண்ணவேண்டியது.

௲௮௱௪௧ வரு சித்திரைமீ உ௩தி.

திருவனந்த புரத்திலிருந்து இரண்டு தங்கநாழிகைவட்டச் சங்கிலிகளையெடுத்துக்கொண்டு ஓடிப்போன கிஷ்ணனென்பவனுடைய அங்க அடையாளக்குறிப்பு.

அவன்பெயர் கிஷ்ணன், இராசகரம், கொச்சி, தேசம் நாலுதேசம், கிராமம் நெல்லிப்பள்ளி முறி, வீடு வாரிபாத்துவீடு, வயது உஉ முதல ௩ய க்குள்ளாக, நிறம் மானிறம், சாதி சூத்திரன், அங்கலட்சணம் நீண்டமுஞ்சை, கொஞ்சந்தாடிமயிரிருக்கும், ஒற்றை நாடி, நிதானமான உயரமுள்ளவன், காதிற் கடுக்கன் போடுகிறதுவாரம பெரிதாயிருக்குங் கடுக்கனிலலே, நெற்றியில் நெருப்புப்பட்டதுபோல ஒரு தழும்பு இருக்கின்றது.

சித்திரைமீ உ௩தி வரவு ஒப்பம் சுப்பராவுதிவான்.
ஒப்பம் சிட்டன்டு டப்பிலியு, கலவின துரையவர்கள்.

புதின சங்கதி.

யாழ்ப்பாணம்.

கனம்பொருந்திய அமரிக்கன குருவாகிய பூரையரும், அம்மா அவர்களும மதுரையை விட்டு இந்த மீ மஅதி செவ்வாய்க்கிழமை இயாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்கள்.

பருத்தித் துறையிலே இராசத்துரையாயிருந்த மெஸதர் திறாற்ற ரென்பவருக்கு கொழும்பிலே ஒரு உத்தியோகங் கிடைத்ததனால அவருடைய இடத்துக்கு மெஸதர் வேகசன் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கோவறனமேந்தின் உத்தரவின் பெயரால் யாழ்ப்பாணத்துப் பட்டணத்திலும், அதன் சூழலிலும் சிலநாளுக்குமுன் ஐம்பது நாய்களுக்கு மேற்படக் கொல்லப்பட்டன. இப்படி நாய்களைக் கொல்லும்படி உத்தரவிடப்பட்ட நாள் பதனைந்து. பட்டணத்திலே நாய்கடித்த வலியினால் இரண்டோரு காரியஞ் சம்பவித்ததெனக் கேள்விப்படும்போது மனதற்கு விதனமாய் இருக்கின்றது.

கொழும்பு.

சிறி இலஸ்துவாட் மெக்கன்சி மகாராசா அவர்கள் வேம்பாவிலே காய்ச்சல சன்னியாய் இருந்தாரென்று துக்கத்துடனே கேள்விப்படுகிறோம். பிறகிட்டு வந்த செய்திகளினால் அவர் சவுக்கியமாகிறதாயும் வைகாசி மீ கதி சுவசுக்குப் போகக் கப்பலேறவிருக்கிற தாயுங் கேள்வியாகிறோம்.

கோவறணமேந்தின் உத்தியோகத்துக்கு உட்பட்ட ஒரு சேவகன் சாராயத்தினால வெறியுற்றவனாய் வீட்டுக்குப் போகும்பொழுது வழியிலே ஒரு மாட்டு பண்டியைக் கண்டு அதனது துலாவின்மேற் றொற்றிச் சற்றிடங் கதியாய் ஓட்டிச் செல்லுகையில், மிகு மயக்குற்றுக் கீழே விழுந்து வண்டிச் சில்லினால் நொருக்கப்பட்டுச் சற்றுநேரத்துக்குள்ளே இறந்துவிட்டான்.

இந்த மீ க.தி மூன்று வாலிபர் மிகூஉவால் என்னும் ஆற்றின் கழிமுகத்திலே நீராடப் போனபொழுது, பத்தொன்பது வயதுள்ள யோவான் இசறு என்னும் அழகிய வாலிபன் ஒருவன அதன் நீரில் அள்ளுப்பட்டு அமிழ்ந்தி இறந்துவிட்டான். அவ்வாலிபன் கொழும்பிற் சாஸதிரப் பள்ளிக்கூடத்தில் ஓர் மாணாக்கனாய் இருந்தான்.

கனம்பொருந்திய வெஸலியன் குருவாகிய வொக்கிஸ என்பவர் சென்னை பட்டணத்தில் இருந்து இங்கிலாந்துக்குப் போகிறபோது பங்குனி மீ உ௩தி கப்பலிலே இறந்துவிட்டார. இவர் மூன்று வருடத்துக்கு முன் இந்தியாவுக்கு வந்தவர்.

சீனம். கந்தன் நகரியை இங்கிலீசு காரர் பிடித்தது. கந்தன் நகரிக்குட்பட நெருங்கிச் சென்றதில் சா சீனர் இறந்தார்கள் கூ இங்கிலீசு காரர் காயப் பட்டார்கள். சீனதேசத்து எமபரதோரின் உத்தரவின்படி சீனவுக்கொம்மிசனர் கீசனென்பவர் விலங்கு போடப்பட்டுப் பீக்கின் நகரிக்குஅனுப்பப்பட்டார். இங்கிலீசுகாரர் போக்குக் கோட்டைகளைப் பிடித்து உடைத்த செய்திகளை எம்பிரதோர் கேள்விப்பட்டு மிகுந்த உக்கிரத்துடனே அகோரமான சண்டை செய்ய உத்தாரஞ்செய்திருக்கிறார். இயாங்கெனனுங் கொமிசார் புதிதாக ஏற்

Digitized by Google

படுத்தப் பட்டுவந்து இங்கிலீசுத் தானாபத்தியமாகிய கைப்பித்தான் எல்லியற்றுடனே தனது எம்பிரதோருடைய சித்தம் அறியும் வரைக்கும் இங்கிலீசுகாரர் வியாபாரம்பண்ணிக்கொள்ளலாம் என்று சமாதான உடன்படிக்கை பண்ணினார். இதைநம்பி ௯ அமரிக்கன் கப்பலும் ௰௪ இங்கிலீசுக் கப்பலும் உவம்புவுக்குப் போய் வியாபாரக்கருத்துடனே இறங்கி இருக்குஞ் சிறிது நாட்களில், சீனயாபாரிகள் ஆயுதந்தரித்துவந்து தடைபண்ணினார்கள். சிறீ கார்டன் பிறீமர் கலகுத்தாவுக்குவந்து ஆக்குலாந்து ஆண்டவனுடனே பேசி அதிகமாகப் பட்டாளஞ் சேர்த்துக் கொண்டு போகவிருக்கிறார். கைப்பித்தான் எல்லியற்று தொந்தரவுக்குட் பட்டிருக்கிறதாயும இரண்டு அரசாட்சிக் காரருக்கும் இருக்கிற மாதிரிக்குப் பொருந்தி வருகிறது பிரயாசமாயுங் காணுகின்றது.

வெம்பாயில் மகராசா சிறி லெமிசு கார்னாக் சுவுக்கிய வீனத்தின் நிமித்தம் அரசாட்சியை விட்டு ஏரோப்பைக்குப்புறப்படவிருக்கிறார்.

சுமூத்திராதீவு- இவ்விடத்தின் நடுப்பகுதியிலே, தீவார் டெகுருக்கு கூடிக் கோட்டைகளையும் பிடித்துத் தங்களை ஆண்டு கொண்டிருந்த உலாந்தாக் காரரையுங்கொன்று பெரிய கலகம் உண்டாக்கினார்கள்.

Summary of News.

JAFFNA.—The Rev. D. Poor, and Mrs. Poor of the American Madura Mission, arrived in Jaffna on Tuesday the 18th inst.

Mr. Trutor, late assistant Custom Master at Pt. Pedro has received an appointment at Negombo—and Mr. Ferguson, it is said, has been appointed to the office vacated by Mr. Trutor.

Killing Dogs by authority.—Upwards of 50 Dogs have been killed in Jaffna and its suburbs within a few days under the authority of Govt.—The period allowed for destroying these animals is 14 days.—We are sorry to learn that one or two cases of hydrophobia have occured in the town.

The Rev. J. Kats, assistant Wesleyan Missionary arrived at Jaffna from Trincomalie on Thursday last, the 15th instant. Both Fever and Cholera are said to have prevailed a good deal lately at Trincomalie, but have now subsided.

The friends of Serg'nt Robert Murray, of the Royal artillery, who was for nearly 2 years doing duty in the garrison here, and who, with his family, embarked for England in April last, will be happy to hear that he arrived safely at Woolwich on the 7th of Sept, and was immediately after permitted to resign with a Pension of 2s. 1½d. per day and with a first-rate character from his commanding Officer.—This testimonial of his past services will it is hoped enable him to procure another situation in some public department.

Sergeant Murray is a member of the Wesleyan Society and distinguished himself while here by his consistent conduct and his zealous efforts in the cause of Christ.

OVERLAND MAIL.—We learn that the next Overland packet from Jaffna will be closed on Thursday the 3d prox. at 5 P. M.—The packet by Express will be closed on the 6th prox. at 5 P. M.

COLOMBO.—His Excellency the Governor has been pleased to appoint the Rev. J. P. Horsford and the Rev. C. Antonio, to be members of the Central School Commission.

A Police Peon returning home intoxicated, jumped on the pole of a Bullock Cart in the way, and commenced driving furiously.—He had proceeded but a little way, when he lost his balance and fell under the wheel which passed over his body and injured him so severely as to occasion his death in a short time.

Fatal Accident—On the 1st. inst. three youths went to bathe at the mouth of the Murwall river, when a fine lad named John Tissera, about 19 years of age, a Student in the Colombo Acadamy, was carried out by the current and drowned.

MADRAS.—The American ship *Calimmet* was to leave Boston about the middle of February, for Madras with a cargo of 300 tons of ice. Her arrival may be expected soon.

The Rev. W. S. Fox, Wesleyan Missionary, died on the 23d. of March at sea, on board the Prince Albert, by which he had taken passage from Madras for England. Mr. Fox arrived in India about three years ago.

CHINA.—*Capture of Canton.* By the Steamer *Queen* which left Canton on the 31st of March and arrived at Calcutta on the 20th ult. the important intelligence has been received that *Canton has been taken by the British troops.* In forcing the passage to Canton the Chinese lost 400 men—while the English had *only six wounded.*—Keshen, the late Chinese Commissioner, had been sent in irons to Pekin, by order of the Emperor.—The Emperor had heard of the destruction of the Bogue forts, and had furiously ordered a war of extermination to be carried on against the English.—On the arrival of the new imperial Commissioner *Yang*, a truce was agreed upon between him, and her Majesty's plenipotentiary, Capt. Elliott, and on the 19th of March a peaceful proclamation was issued by the former declaring the trade to be reopened at Canton, till the Emperor's pleasure was known. Nine American and 14 British ships had in consequence proceeded to Whampoa for the purpose of trade, but in a few days new obstacles were thrown in their way, the Chinese traders, being all armed. The Commodore gave notice that permitting ships to proceed to Whampoa, the parties would incur the consequences in case hostilities should suddenly be resumed. Sir Gordon Bremer came to Calcutta in the *Queen* for the purpose of conferring with Lord Auckland, and to obtain a reinforcement of troops. It is stated that Capt. Elliott is in a difficult position and that the differences between the two Governments are as far from a termination as ever.

BOMBAY.—Sir James Carnac, Governor of Bombay, is about to retire from the Government and depart for Europe, in consequence of ill health.

Illness of Mr. Stewart Mackenzie—We regret to learn that on his arrival at Bombay the late Governor experienced a very severe paroxysm of fever. At the latest accounts he was, however, convalescent, and expected to leave by the Steamer for Suez on the 1st May.

SUMATRA.—A serious revolt has broken out all over the interior of Sumatra. Fort De Cock and several other fortifications, had been captured, the natives and the Dutch troops slaughtered in every quarter. Fears were entertained that Padang would be attacked, and vessels were kept in readiness to embark the inhabitants should such an event take place.

EGYPT.—It is stated in a Letter from Cairo dated March 14th, that Mohomed Ali refuses to accept the hereditary government of Egypt on the terms offered by the Sultan and is making every preparation for resisting their enforcement. He has told his chief Military Officers to be prepared for war.

NOTICE.

The Conducters of the American Mission Seminary at Batticotta, inform their native friends, that there will be a Public Examination of the students in Tamil on Wednesday, the 26th inst. and solicit their attendance.

அமரிக்கன் மிசியோனைச்சேர்ந்த வட்டுக்கோட்டையிற் சாத்திரப் பள்ளிக்கூடத்தைப் பராமரிப்பவர்கள், கறுத்த மனுஷராகிய தங்கள் சிநேகிதருக்கு அறிவிக்கிற தென்னவானால்,

இந்த, மீ ௨௬ திகதி புதன்கிழமை ௰ மணிக்கு வட்டுக்கோட்டையிற் சாத்திரப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் கற்றிருக்குந் தமிழ்ப்படிப்புகள் சோதனை பண்ணப் படும். ஆகையால் நீங்களும் அவ்விடம் வரும்படி உங்களைக் கேட்டுக் கொள்ளப் படுகுது.

SELECTIONS OF POETRY.

Just published by the Jaffna Book Society, and will be ready for delivery at the Depository in Jaffna, next week—SELECTIONS OF POETRY, pp. 104, 12 mo. neatly bound, price 2s. 6d.

அட்டவணை.—CONTENTS.

இந்து தேசச் சரித்திரம்	89	Brief Historical view of India -	89
கூட் என்பவர் செய்த பிரபஞ்ச நூல் - - -	90	Abridgement of Good's Book of Nature - - - -	92
தென் சமுத்திர திவுகளில் நடந்த சங்கதிகள் -	93	From Williams' Missionary Enterprizes in the South Seas - -	93
மிருகங்களைப் பழக்குவதனால்வரும் பலன் - -	94	Effect of early training on animals of different habits - -	94
பஞ்ச தந்திரக் கதை -	95	Pancha-Tantra-katei - -	95
புலம்புவோருக்குச் சொல்லிய புத்தி - - -	96	A Jewish story - -	96
இந்து தேச இங்கிலிஸ இராச்சிய விருத்தி - -	ib.	Advice to Mourners - -	ib.
புகைக் கப்பல் - -	ib.	Rapid growth of British power in India - - - -	ib.
மதுரை - - -	96	Account of the Atlantic Steam ship President - - - - -	ib.
நைடதத்தைப் பற்றியது	98	Statistics of the collectorate of Madura - - - -	97
திரியாங்கத்தைப் பற்றியது	99	Answer to a correspondent, on Nydertham - - -	98
புதின சங்கதிகள் -	ib	Scale for transferring words, &c.	99
		Communications &c. - -	ib.

Digitized by Google

Printed and published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor,—Edited by Henry Martyn and Seth Payson.